



F. 7/46


லைப்பாய்
பழக்கத்தையும் அவன்
அறிந்திருக்கிறான்
அவன் ஸ்கூலுக்குப் போகிறான். அங்கிருந்து என்ன கொண்டு வருவான்? புதிய அறிவு, புதிய முறைகள்—சில தொத்து வியாதிக் கிருமிகளுங்கூட! அவனுக்குக் கற்றுக் கொடுத்த எல்லாப் பாதுகாப்புகளுடனும் தாயார் தன் மகனை அனுப்புகிறாள். ஆரோக்கியமுள்ள ஒருவனையும் பிடிக்கக் கூடிய அழுக்கு அபாயத்திலிருந்து காப்பாற்ற லைப்பாய் சோப்பைத் தினசரி உபயோகிப்பதே அவற்றுள் முக்கியமானது.
LIFEBUOY
SOAP
லைப்பாய் ஒரு நல்ல சோப்பைக் காட்டிலும் சிறந்தது.
அது ஒரு நல்ல பழக்கம்.



DROPS





இப்பொழுது!
பிரஷின் ஒவ்வொரு வருடலிலும் கூடுதல் துலக்கும் வன்மை!
நீர் கடக்காது நனைவுமேற்காது
பற்களைச் சுத்தப்படுத்தி வெண்மை யாக்குவதில் 60% அதிக பயன் தரத் தக்கது.
ஒரு வருட உத்தரவாத முடையது.
இதோ மீண்டும்
Dr. West's
Miracle-Tuft
MEDIUM
மிருகங்களின் மயிரே கிடையாது
Dr. West's
TOOTH PASTE
விநியோகஸ்தர்கள் :
டாக்டர் வெஸ்ட்ஸ்
டூத் பிரஷுகளும் டூத் பேஸ்டும்
Copyright
D. W. 6283



பரம்பரையாக அழகைக் காப்பாற்றுதல்

ஒரு பெண்களுக்கு புத்தி சொல்ல தாயார்களைக் காட்டிலும் சிறந்தவர் இல்லை. சுத்த ஜலமும், பியர்ஸ் சோப்பும் கொண்டு, ஒழுங்கான முறையாகச் சருமத்தின் அழகைக் காப்பாற்றிக் கொள்வதே இந்தத்தாய் தன் மகளுக்குக் கற்பிக்கும் புத்திமதிகளில் ஒன்று. தன் தாயிடமிருந்து கற்ற இந்த முறையைத்தான் இவள் தன் சிறுவயதிலிருந்தே அனுசரிக்கிறாள். அதனால்தான் இவளுடைய சருமமும் இன்றுவரை மாசில்லாமல் காணப்படுகிறது. மகளும் தன் சருமத்தை ஜாக்கிரதையாக அதே மாதிரிக் காப்பாற்றிக்கொண்டு வருகிறாள். ஆகையினால், இவள் சருமமும் தாயினுடையதைப் போல யாதொரு பழுதுமின்றி விளங்கும்.

காற்பது ஆண்டுகளாக, இந்திய அழகிகளின் பிரிய சோப் பியர்ஸ்தான். அதன் மணமும், பட்டுபோன்ற மிருதுவான நுரையும் மற்ற சோப்புகளைவிட உயர்ந்த ஸ்தானத்தில் அதை வைக்கின்றன.



பியர்ஸ் சோப்

அழகின் அடிமை

TG. 39-172 TM   A. & F. PEARS, ISLEWORTH, ENGLAND


கல்கி பொருளடக்கம்

ர் 5
தழ் 29

1946 பிப்ரவரி 24

பார்த்திப ௵
மாசீ 13உ

மகாத்மாஜியின் தமிழக யாத்திரையின்போது அவர் முக்கியமாக மூன்று தெய்வங் ம் பார்த்துவிட்டு வந்தார். முதல் தெய்வம் மதுரை மீனாக்ஷி அம்மன். இரண்டாவது னி முருகக் கடவுள். மூன்றாவது, அன்னை கஸ்தூரிபா என்னும் பத்தினித் தெய்வம்.



முதல் இரண்டு தெய்வங்களையும் மகாத்மாஜி அந்தந்த லைகளுக்கே சென்று தரிசித்துவிட்டு வந்தார். மூன்று தெய்வமான கஸ்தூரிபா அம்மையாரோ தமது பர்த்தா த் தேடிக்கொண்டு ரயிலடிக்கே வந்து தரிசனம் தந்தார்!

மதுரை பழனி யாத்திரை மார்க்கத்தில் மகாத்மாஜி மனதுக்குகந்த காட்சிகள் எவ்வளவோ தென்பட்டன. னாலும் மாயவரம் ரயிலடியில் கண்ட காட்சியானது மகாத் ுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தது. அன்றைய ம் மகாத்மாஜிக்கு மௌன தினமென்றாலும் அவர் அந்த ய காட்சியைக் கண்டுவிட்டு மௌனப் புன்னகை பூத்த ந்து இது நன்கு தெரியவந்தது. அந்தக் காட்சி என்ன ன்றால், மாயவரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கூடி ன்னை கஸ்தூரிபாவின் படத்தை அழகான விமானத்தில் த்து அலங்கரித்துக்கொண்டு வந்திருந்ததுதான்.

“ஆயிரமானாலும் மாயவரம் ஆகாது” என்னும் பழ மொழியை அன்று மாயவரம் வாசிகள் நிரூபித்துக் காட்டி கள். சென்ற வெள்ளிக்கிழமை யன்று காலஞ்சென்ற ஸ்தூரிபாவின் சிராத்த தினத்தை இந்தியா தேசமெங்கும் சிறப்பாகக் கொண்டாடினார்கள். ஆனாலும் அன்றைக்கு மாயவரம் ரயிலடியில் காந்திஜி தலைமையில் நடத்திய கஸ்தூரிபா ஞாபகார்த்தக் கொண்டாட்டத்தைப்போல் வேறு ருமே கொண்டாடியிருக்க மாட்டார்கள் என்பது நிச்சயம்.

கல்கி

மலர் 5 } தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடிப் பாப்பா —பாரதியார் } இதழ் 29

என்ன சேதி?

பிரிட்டன் ஜயிக்குது!

சென்ற ஐந்தாறு மாதங்களாக இந்தோனேஷியா தன் சுதந்திரத்துக்காகப் போராடி வருவது நமக்கெல்லாம் நன்றாகத் தெரியும். அது டச்சு ஏகாதிபத்தியத்தை மாத்திரம் எதிர்த்துப் போராடவில்லையென்பதும், மகா வல்லமை வாய்ந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தையும் சேர்த்து எதிர்த்துப் போராடி வருகிறது என்பதும் நமக்கு நன்றாகத் தெரியும். இந்தோனேஷியாவிலே பிரிட்டிஷ்காரர்கள் ஜப்பானியத் துருப்புகளை இந்தோனேஷிய மக்கள் மீது ஏவி, பீரங்கிப் பிரயோகமும் செய்தபோது, "ஐயோ, இது என்ன அக்கிரமம்! இதை ஒழிப்பதற்குக் கடவுள் இல்லையா?" என்று நாம் வருந்தினோம். "ஒருவேளை கடவுளும் ஆங்கிலோ-ஸாக்ஸன் சாதியாருக்குத்தான் உதவி செய்வார் போலிருக்கிறது" என்றும் நாம் கருதினோம். அது சரியல்லவென்பதைச் சென்ற வாரம் ஒருவாறு கண்டோம். கடவுள் இந்தோனேஷியாவுக்கு உதவ முன் வந்தார். தானாக நேரில் வந்து, இந்த வல்லரசுகளுக்கு மத்தியிலே மாட்டிக் கொள்வாரா? ஆகையால், ருஷிய-உக்ரேனியப் பிரதிநிதியாகிய டாக்டர் மெனுஊல்ஸ்கி மூலம் உதவிசெய்ய முன் வந்தார். ஆனால், கடவுளாகத்தான் இருக்கட்டும், யாராயிருக்கட்டும், பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி எர்னஸ்ட் பெவினுக்கு முன் எம்மாத்திரம்? பெவின் கடவுளையே தோற்கடித்து அவருடைய முதுகுக்கு மண் காட்டியிருக்கிறார். உக்ரேனியப் பிரதிநிதி டாக்டர் மெனுஊல்ஸ்கி ஐக்கிய தேச மகா சபையில் கொண்டுவந்த மேற்படி தீர்மானத்தை பெவினும் அவருடைய சகாக்களும் சேர்த்து தோற்கடித்துவிட்டார்கள்!

டாக்டர் மெனுஊல்ஸ்கி அப்படி என்ன தீர்மானம் கொண்டு வந்தார்? இந்தோனேஷியாவுக்கு இப்போதே சுதந்திரம் கொடுக்க வேண்டுமென்று சொன்னாரா? டச்சுக்காரர்கள் உடனே இந்தோனேஷியாவை விட்டு வெளியேற வேண்டுமென்று வற்புறுத்தினாரா? அல்ல, அல்ல. யுத்தத்துக்கு முன்னாலே, அதாவது 1939-ம் வருஷத்திலே ஜாவா என்பதாக ஒரு நாடு இருப்பதாக உலகப் படத்திலே போட்டிருந்தார்களே, அந்த மாதிரியாக ஒரு நாடு இப்போது இருக்கிறதா? அப்படி இருந்தால் அங்கே இந்தோனேஷியர்கள் சிலராவது இருக்கிறார்களா, அல்லது டச்சுக்காரர்களே இருக்கிறார்களா? இரண்டு பேருக்குமுள்ள உறவு எந்த நிலைமையில் இருக்கிறது?—இதையெல்லாம் நேரில் பார்த்து வருவதற்காக ஒரு தூது கோஷ்டியை ஜாவாவுக்கு அனுப்ப வேண்டும் என்றார் டாக்டர் மெனுஊல்ஸ்கி. ஆனால், பெவின் தூது கோஷ்டியை அனுப்புவதற்கு இணங்கவில்லை.

முன் வருவாரா?


பெவின் எதற்காக மறுக்க வேண்டும்? காரணம் என்ன? மடியிலே கனம் இருந்தால்தானே வழியிலே பயப்பட வேண்டும்? பிரிட்டனின் கை ஜாவாவிலே சுத்தமாயிருக்கும் பட்சத்தில், தூது கோஷ்டியை அனுப்புவதற்கு அது ஏன் பயப்பட வேண்டும்? அது தாராளமாகப் போய் வருவதற்கு அனுமதிக்கலாம் அல்லவா? ஆனால், பிரிட்டனின் கை ஜாவாவிலே சுத்தமாயில்லை என்பதும் ஒரு தூது கோஷ்டியை அனுப்பினால் குட்டு வெளியாகிவிடும் என்பதும் மற்றவர்களுக்குத் தெரியாவிட்டாலும் பெவினுக்கு நன்றாகத் தெரியுமல்லவா? ஆகவே, அவர் உக்ரேனியப் பிரதிநிதியின் தீர்மானத்தை எதிர்த்துத் தோற்கடித்

தில் அதிசயம் ஒன்றும் இல்லை. ஆனால், இந்த பெவின் கோஷ்டியின் ஆதிக்கம் மிருந்துள்ள ஐக்கிய தேச மகா சபை மூலம் இந்தோனேஷியாவுக்கு ஏதாவது உதவி கிடைக்குமென்று யாராவது எதிர் பார்த்திருந்தால் அதுதான் அதிசயமா யிருக்கும்.

இதற்கு நடுவிலே டச்சுக்காரர்கள் புதிய சீர்திருத்தம் ஒன்றைக் கொண்டு வந்து அதை இந்தோனேஷியர்களுடன் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் புதிய சீர்திருத்தத்தை மாத்திரம் கொண்டு வரவில்லை. அத்துடன், அதற்கு அனுசரணையாக பீரங்கியையும் துப்பாக்கியையும் கொண்டு வரப் போகிறார்கள்! யாருடைய உதவியுமற்றிருக்கும் இந்தோனேஷியாவுக்கு உதவி செய்ய மீண்டும் கடவுள் முன் வருவாரா? அல்லது பெவினுக்குத் தம்முடைய ஸ்தானத்தைக் கொடுத்துவிட்டு விலகிக் கொள்வாரா?

நூறு மடங்கு விசேஷம்

ஆண்டு தோறும் திருவையாற்றில் ஸ்ரீ தியாகப் பிரம்ம ஆராதன உற்சவம் சிறப்பாக நடைபெற்று வருகிறது என்றாலும், வரும் வருஷத்தில் நடக்கப்போகு அந்த உற்சவம் வழக்கத்தைவிட நூ மடங்கு விசேஷம் பெற்றதாக இருக்கு ஏனெனில் ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி சமா அடைந்த நூறாவது ஆண்டு ஆராத வரும் வருஷத்தில் நடக்கப்போகிற ஆகவே, அதை வழக்கத்தைவிட நூ மடங்கு சிறப்பாக நடத்த வேண்டு என்று ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் பக் களும், சங்கீத வித்வான்களும், அபிமா களும் நிர்மானித்து, அதற்கு வேண்டி திறமையும் ஊக்கமும் உள்ளவர் யா என்று பார்த்து, ஸ்ரீ எஸ். வேங்கடே வரன் ஐ. சி. எஸ். அவர்களுக்கு மேற்ப மகோத்ஸவத்தை நடத்தி வைக்க சர்வாதிகாரம் கொடுத்திருக்கிறார்க ஸ்ரீ வேங்கடேசுவரனும் அதற்கு வே டிய பிரயத்தனங்களை இப்போ தொடங்கி விட்டார் என்று அறிகிறோ சென்னை மாகாணத்திலுள்ள சங்கீ வித்வான்கள், அபிமானிகள் அனைவ வழக்கத்தைக் காட்டிலும் நூறு மடங் உற்சாகமும் ஊக்கமும் காட்டி ஸ்ரீ வேங் டேசுவரனுடன் ஒத்துழைத்து, மேற்ப மகோத்ஸவத்தைச் சரித்திரப் பிரசித் பெறும்படியான முறையில் நடத்தி வை பார்கள் என்று நம்புகிறோம்.


ச் சு மாதக் கடைசியில் இந்தியாவுக்கு
பெதிக்லாரன்ஸ், ஸர் ஸ்டாபோர்ட்
ஸ், அலெக்ஸாந்தர் ஆகிய மூன்று
டிஷ் மந்திரிகள்
ருகிறார்கள்...
புதிய திட்டம்
இந்தத் தடவை அவர்கள்
வெறுங் கையோடு வரமாட்டார்கள்.
ஒன்றும் கொஞ்சம்
சரக்காகவே கொண்டு
வருவார்கள் என்றும்
எதிர்பார்க்கப்படுகிறது.
துபடி நடக்கப்போகும் சர்வதேச 'ஒலிம்பிக்'
யத்தில் ருஷியாவும் கலந்து கொள்ள
க்கொண்டிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.
நாடு
பிடிக்கும்
பந்தயம்
ஆனால், இந்த ஓட்டப் பந்தயம் ஏற்கெனவே
நடந்து கொண்டுதான் இருக்கிறது.

பஞ்சம்! ஜாக்கிரதை!

நமது காருண்ய பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார், மகாமேன்மை தங்கிய விக்டோரியா மகாராணியின் ஆட்சி காலத்திலே இந்தியா தேசத்துக்கு அனுப்பி வைத்த நன்மைகளில் ஒன்றாகிய மூன்றாம் வகுப்பு ரயில் வண்டிகளில், "ஒட்டுப் பிரயாணிகள்" என்னும் கட்டுக்கதைக்குக் கீழேயோ, மேலேயோ, பக்கத்திலேயோ, "திருடர்கள் ஜாக்கிரதை" என்பதாக ஒரு எச்சரிக்கை, கொட்டை எழுத்திலே கொட்டுக்கூடை முழி முழித்துக் கொண்டு காணப்படும்.

"திருடர்கள்! ஜாக்கிரதை!" என்னும் எச்சரிக்கையானது, திருடர்களுக்காக ஏற்பட்ட எச்சரிக்கையா, அல்லது பிரயாணிகளுக்காக ஏற்பட்ட எச்சரிக்கையா என்னும் விஷயம் நாளது வரைக்கும் சர்ச்சைக்கு இடமாக இருந்து வருகிறது.

அது போலவே, நாளது 1946-ம் வருஷத்தில் "பஞ்சம்! ஜாக்கிரதை!" என்ற எச்சரிக்கையானது நாலாபுறத்திலிருந்தும் வந்து நம்மை இடைவிடாமல் தாக்குகிறது.

சர்க்கார் அதிகாரிகள் எச்சரிக்கிறார்கள்; நமது அன்புக்குகந்த தலைவர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள்; பத்திரிகைகளிலே மேற்படி எச்சரிக்கை கண்ணைக் கவர்கிறது; ரேடியோவிலே அந்த எச்சரிக்கை நமது காதைத் தொளைக்கிறது.

ரொம்ப சரி; ஆனால் யாருக்காக அந்த எச்சரிக்கை?

வைஸ்ராய் வேவல் துரை உள்ளிட்ட சர்க்கார் அதிகாரிகள் பொதுஜனங்களைப் பார்த்து, "பஞ்சம்! ஜாக்கிரதை!" என்று எச்சரிக்கை செய்கிறார்கள். அதாவது, "பொது ஜனங்கள் சர்க்கார் அதிகாரிகளோடு ஒத்துழைத்து முன் ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். இல்லாவிடில் பயங்கரமான பஞ்சம் வந்தே தீரும்!" என்று எச்சரிக்கிறார்கள்.

அப்படிப் பொது ஜனங்களுக்கு எச்சரிக்கும் வைஸ்ராய் வேவல் முதலிய சர்க்கார் அதிகாரிகளைப் பார்த்து, நமது பண்டித ஜவாஹர்லால் நேரு "பஞ்சம்! ஜாக்கிரதை!" என்று கண்டிப்பாக எச்சரிக்கை செய்கிறார்.

அதாவது, "இந்தத் தடவை பஞ்ச
வந்தால், வங்காளத்தில் ஜனங்க
செத்து மடிந்ததுபோல் மடிவார்க
என்று நினைக்க வேண்டாம். ஜாக்
ரதை!" என்று நமது மாபெருந் த
வர் பண்டித ஜவாஹர்லால் பொ
ஜனங்களின் சார்பாகச் சர்க்காருக்
எச்சரிக்கிறார்.

இப்படியாக, சர்க்கார் அதிகாரிக
பொதுஜனங்களுக்கும் பொதுஜன
தலைவர்கள் சர்க்காருக்கும் எச்சரிக்
செய்து கொண்டிருக்கும் நிலைமையில்
நாம் அந்த சாக்ஷாத் பஞ்ச பகாசு
ரனுக்கே பின்வரும் கண்டிப்பான எ
ச்சரிக்கையைச் செய்கிறோம்.

"பஞ்சமே! ஜாக்கிரதை! மூ
தடவை நீ வங்காளத்தில் தங்கு தடை
யின்றி வந்து முப்பது, நாற்பது ல
சம் மக்களை விழுங்கி ஏப்பம் வி
டாயே! அம்மாதிரி இந்தத் தடவை
சுலபமாய்க் காரியத்தைச் சாதித்து
கொண்டு போய்விடலாம் என்று நினை
காதே! இந்தத் தடவை இந்திய சர்
காரும் மாகாண சர்க்கார்களும் விழி
த்துக் கொண்டு எச்சரிக்கையா யிரு
கிறார்கள். எங்கள் தேசத் தலைவர்களு
சிறையில் அடைக்கப்படாமல் வெ
யிலே இருக்கிறார்கள். ஆகையா
நீ சந்தடி சாக்கில் இந்தியாவி
நுழைந்து அபக்காயஸ்வாஹா செய்
லாம் என்ற எண்ணத்தை அடியோ
விட்டு விடு!" என்று எச்சரிக்கிறோ

* * *

இப்படியாகப் பஞ்ச பகாசுரனுக்
நாம் எச்சரிக்கை செய்த போதிலு
ஒரு விதத்தில் பஞ்ச பகாசுரன் இந்தி
சர்க்கார் மனோ பாவத்தில் ஏற்படுத்
யிருக்கும் மாறுதலை எண்ணிப் பார்த்
அந்தப் பகாசுரனுக்குத் 'தாங்
சொல்லவும் தோன்றுகிறது.

இந்தியாவிலே பிரிட்டிஷ் ஆட்சியி
சரித்திரத்தில் இதுவரையில் ஸ்ரீமா
பொதுஜனம் என்பதாக ஒருவர் உண்
என்பதைப் பிரிட்டிஷ் சர்க்கார் உத்
யோக முறையில் ஒப்புக்கொண்ட
கிடையாது. இந்தியாவில் ஹிந்துக்க
உண்டு, முஸ்லிம்கள் உண்டு, சீக்கிய
உண்டு, ஷெட்யூல் வகுப்பார் உண்டு
பார்ஸிகள் உண்டு, ஆங்கிலோ இந்திய

உண்டு, வர்த்தகர்கள் உண்டு, தொழிலாளிகள் உண்டு, ராஜாக்களும் மகாராஜாக்களும் நவாபுகளும் உண்டு, அவர்களுடைய ராஜ்யங்களிலே வேட்டையாடப் புலிகளும் இரண்டு கால் பிராணிகளும் உண்டு! மற்றப்படி இந்தியாவிலே 'பொதுஜனம்' என்பதாக ஒரு கூட்டம் உண்டு என்று பிரிட்டிஷ் சர்க்கார் அங்கீகரிப்பதில்லை.

இந்த வருஷத்திலே வருவதாகப் பயமுறுத்தும் பஞ்சமானது, பிரிட்டிஷ் சர்க்காரைப் பொதுஜனம் இருப்பதாக ஒப்புக் கொள்ளச் செய்திருப்பதுடன், அந்தப் பொதுஜனத்தைச் சர்க்காரோடு ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளவும் செய்திருக்கிறது.

அதுமட்டுமல்ல, பொது ஜனத் தலைவர்கள் உண்டு என்று ஒப்புக் கொள்ளச் செய்திருக்கிறது.

அந்தத் தலைவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரும்படியும் செய்திருக்கிறது.

அதைக் காட்டிலும் அதிசயம் என்னவென்றால், "பொதுஜனத் தலைவர்கள் காட்டிய வழியைப் பொது ஜனங்கள் பின்பற்றுங்கள்!" என்று சர்க்காரே சொல்லும்படி செய்திருக்கிறது.

ஆம்; வைஸ்ராய் வேவல் தமது ரேடியோப் பிரசங்கத்தில் மகாத்மா காந்தியும், ஜனாப் ஜின்னாவும் காட்டின வழியைப் பொதுமக்கள் பின்பற்றும்படி சொல்லியிருக்கிறார்!

மகத்தான அதிசயந்தான்!

* * *

பஞ்சம் செய்திருக்கும் மற்றொரு அதிசயம் என்னவென்றால், இந்திய சர்க்காரின் அதிகார வர்க்கங்களிடையே முன் எப்போதுமில்லாத சுறுசுறுப்பை உண்டு பண்ணியிருக்கிறது.

இந்திய சர்க்காரின் புள்ளி விவர இலாகாவுக்குக்கூட அது சுறுசுறுப்பை அளித்திருக்கிறது.

"1946-ம் வருஷத்தில் இந்தியாவின் தேவைக்கு வேண்டியதில் 30 லட்சம் டன் தானியம் துண்டு விழுகிறது" என்று அந்த இலாகாகாரர்கள் இந்த வருஷ ஆரம்பத்திலேயே சொல்லி விட்டார்கள்!

சாதாரணமாக, இந்தக் கணக்கு 1949-ம் வருஷத்திலேதான் வெளியாக வேண்டியது. மூன்று வருஷம் முன்னாலேயே சொல்லி விட்டார்கள்!

சர்க்கார் இலாகாக்கள் அவ்வளவு சுறுசுறுப்பை அடைந்திருக்கின்றன.

அந்தச் சுறுசுறுப்பின் காரணமாகவும், வைஸ்ராய் வேவலின் நிர்வாகத் திறமை காரணமாகவும் பஞ்சத்தைத் தடுக்க இன்னும் சில சுறுசுறுப்பான காரியங்களும் செய்திருக்கிறார்கள்.

அவற்றில் சில வருமாறு:—

1. வெளி நாடுகளிலிருந்து இந்தியாவுக்குத் தானியம் அனுப்பச் செய்வதற்காக சர்க்கார் தூது கோஷ்டி ஒன்று போயிருக்கிறது.

2. இந்தியாவில் எல்லா இடங்களிலும் ரேஷன் ஏற்பாட்டைப் புகுத்தப் போகிறார்கள்.

3. பழைய ரேஷனில் நாலில் ஒரு பங்கைக் குறைத்திருக்கிறார்கள்.

4. சர்க்கரைவள்ளிக் கிழங்கு, மணிலாக்கொட்டை என்னும் நிலக்கடலை, கல்யாணப் பூசணிக்காய், துவரம் பருப்புத்தோலி, காட்டாமணக்கு இலை ஆகியவற்றில் உள்ள உணவு சத்தைப் பற்றி ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி, அரிசிக்குப் பதிலாக மேற்படி உணவுப் பொருள்களை உபயோகிக்கும்படி பிரசாரம் செய்கிறார்கள்.

5. இனிமேல், நிலத்தையும் ஜலத்தையும் உணவுப் பயிருக்கே முக்கியமாக உபயோகிப்பதற்குத் திட்டம் தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள்.

ஏதோ இந்த மட்டும் செய்கிறார்களே அதுவரையில் க்ஷேமந்தான். வெளி நாடுகளில் உணவுப் பொருள் கேட்பதற்காக சர்க்கார் தூது கோஷ்டி போவதில் ஒரு லாபம் நிச்சயமாயிருக்கிறது. அவர்கள் சாப்பிடக் கூடிய சாப்பாடு இங்கே மிச்சமாகும். ஆகையால், அவர்கள் வெளிநாடுகளிலேயே தங்கி விட்டாலும் நல்லதுதான்! பஞ்சம் தீர்ந்த பிறகு திரும்பி வரலாமே!

* * *

"சீனிவாச வரதப்பா!" என்று பக்தன் மனமுருகிப் பகவானை அழைத்தபோது, "எங்கே வரதப்பா?" என்று எழுந்து உட்கார்ந்தானாம் வயிற்றுப் பக்தன்.

"எங்கே வரதப்பா?" என்று கேட்டவனுடைய நிலைமைக்கு இப்போது இந்தியா முழுவதுமே வந்து விட்டது. பஞ்சத்தில் சாகாமல் பிழைத்திருப்பதற்காக வெளி நாடுகளை "அரிசி அனுப்புங்கள்! கோதுமை அனுப்புங்கள்!" என்று கெஞ்சும் நிலைமைக்கு வந்து விட்டோம். அதற்காகத் தூது வேறு அனுப்புகிறோம். அரிசி அல்லது கோதுமை யாராவது அனுப்புகிறேன்

என்றால், அதைக் கொண்டு வந்து சேர்ப்பதற்குக் கப்பலுக்கு வேறு கெஞ்சி யாக வேண்டும்!

இத்தகைய நிலைமை—இரு நூறு வருஷத்து பிரிட்டிஷ் ஆட்சியினால் ஏற்பட்டிருக்கும் அழகான நிலைமை,—மகாத்மா காந்தியின் உள்ளத்தை மிகவும் புண்படுத்தி யிருக்கிறது.

"கங்கையும் யமுனையும் காவேரியும் பாயும் இந்தப் பொன்விளையும் பூமியில் பிறந்த நாம் அன்னிய நாடுகளிலிருந்து தானியப் பிச்சை எடுக்க வேண்டுமா? இது என்ன அநியாயம்?" என்று காந்தி மகான் கேட்கிறார்.

"பிற நாடுகளை நம்பி யிருந்து விடாமல், எப்படியோ ஜனங்கள் வாயைக் கட்டி வயிற்றைச் சுருக்கிக் கூடிய வரையில் உள்ளதைக் கொண்டு சமாளிக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

"பெருந்தீண்டி விருந்துகளை நிறுத்த வேண்டும்" என்கிறார்.

"புஷ்பச் செடிகளுக்குப் பதில் கறிகாய்ச் செடிகளை வளர்க்க வேண்டும்" என்கிறார்.

"ஒரு செம்பு தண்ணீரைக் கூட வீணாக்காமல் கத்திரி—புடலுக்கு விட வேண்டும்!" என்கிறார்.

இதை யெல்லாம் ஜனங்களுக்குச் சொல்லி விட்டு பிரிட்டிஷ் சர்க்காருக்கும் ஒன்று சொல்லி யிருக்கிறார்.

"அன்னிய அதிகார வர்க்க சர்க்காரால் பஞ்சத்தை ஒரு நாளும் சமாளிக்க முடியாது. தேச மக்களின் பிரதிநிதிகள் அடங்கிய தேசீய சர்க்காரால் தான் அது முடியும்!" என்று கண்டிப்பாகச் சொல்லி யிருக்கிறார்.

காந்தி மகாத்மாவின் யோசனைகளை ஒரு பக்கத்தில் பொது ஜனங்களும், மற்றொரு பக்கத்தில் இந்திய சர்க்காரும் பின்பற்றி நடந்தால், பஞ்சமானது இந்தியாவில் நுழையப் பயந்து கொண்டு திரும்பிப் போய்விடும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

* * *

இந்த வருஷத்துப் பஞ்சத்தைத் தடுப்பதற்குத் தாற்காலிக ஏற்பாடுகள் எல்லாம் ஒருபுறமிருக்க, இந்த தேசத்திலிருந்து பஞ்ச பிசாசை நிரந்தரமாக ஓட்டுவதற்குப் பல காரியங்கள் செய்தாக வேண்டும்.

இதெல்லாம் வருங்கால சுயராஜ்ய சர்க்கார் எஞ்சினீரிங் நிபுணர்களைக் கொண்டு ஐந்து வருஷத் திட்டம், பத்து வருஷத் திட்டம் போட்டுச் செய்ய வேண்டிய காரியங்கள்.

எல்லாவற்றிற்கும் அடிப்படையான காரியம் ஒன்று இருக்கிறது.

அது உணவுப் பொருள் பயிர் செய்யும் விவசாயிக்கு உற்சாகம் அளிப்பது.

தற்போது சர்க்கார் விவசாயிக்கு அளிக்கும் உற்சாக மெல்லாம் அவன் தலையில் தாங்க முடியாத வரிப்பளுவை வைத்து அழுக்குவது ஒன்றுதான்!

தானியத்தின் விலையை உயர்த்தினால் அதனால் சில கெடுதல்கள் விளையும் என்பதை ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனால், விவசாயத்துக்காகும் செலவு அதிகமாகி யிருப்பதையும் மற் எல்லாச் சாமான்களின் விலைவாசிகளையும் ஒத்திட்டுத் தானியத்துக்குச் ச யான நியாயமான விலை ஏற்படுத்துவது அவசியமாகும்.

தானிய விலையை உயர்த்துவதற்குச் சில ஆட்சேபங்கள் இருக்கலாம். ஆனால் வரியைக் குறைப்பதற்கு ஒரு ஆட்சேபமும் இருக்க முடியாது.

பஞ்ச நிவாரணத்துக்கு முதல்படியாகச் செய்ய வேண்டிய காரியம், உணவுப் பொருள் விளையும் நிலங்களுக்கு நிலவரியை உடனே பாதியாகக் குறைப்பதுதான்!

புதிதாக உணவுப் பொருள் விவசாயம் செய்யப்படும் நிலங்களுக்கு ஏழு வருஷம் வரி இல்லை என்று சொல்லிவிட வேண்டும்.

அதோடு, சர்க்காரிலிருந்து நன்கொடையும் தரவேண்டும்.

* * *

இன்னும் ஒரு காரியமும் இருக்கிறது. விளைச்சல் இல்லாதபடியால் தேசமெங்கும் பஞ்சம் என்று கூக்குரல் எழுந்திருந்த போதிலும், அப்படி விளைச்சல் பாழான நிலத்துக்கு நிலவரி வஜா பெறுவதற்குள் விவசாயியின் பிராணன் போய் விடுகிறது! இந்தக் கொடுமை உடனே நிற்கவேண்டும்.

விளைச்சல் இல்லாத ஜில்லாக்களிலும், விளைச்சல் குறைந்த ஜில்லாக்களிலும் நிலவரியைப் பூராவும் உடனே வஜா செய்யவேண்டும்.

இத்தகைய முறைகளினால் விவசாயிகளின் கஷ்டத்தைக் குறைத்து அவர்களை உற்சாகப் படுத்தாமல், பஞ்ச நிவாரணத்துக்குச் செய்யும் மற்றக் காரியங்கள் எல்லாம் அஸ்திவாரம் போடாமல் வீடு கட்டுவதாகவே முடியும்.

கல்கி சிவகாமியின் சபதம்



அத்தியாயம் 21

புலிகேசி நாடகம்

காஞ்சிமா நகரின் அரண்மனையில் ாம் சென்ற அத்தியாயங்களில் கூறிய ாதல் நாடகம் நடந்து கொண்டிருந்த பாது, திருக்கழுக்குன்றத்தில் ாண்டிய சைன்யம் தண்டு இறங்கி ருந்த பிரதேசத்தில் தினந்தோறும் ிரவு "புலிகேசி நாடகம்" நடந்து காண்டிருந்தது.

பாண்டிய வீரர்கள் தங்கள் இள ரசர் உடல் நலம் குன்றி நோய்ப் ்டிருந்த காரணத்தினாலும், வாதாபி த்தத்துக்குத் தாங்கள் போகப் பாகிறோமோ இல்லையோ என்ற சந் தகத்தினாலும் மிக்க மனச் சோர்வை டைந்திருந்தார்கள்.

அந்த மனச் சோர்வைப் போக்கி வர்களை உற்சாகப்படுத்தி வைப்பதற் க இலங்கை இளவரசர் மானவன் பல ஏற்பாடுகள் செய்திருந்தார். ருக்கழுக்குன்றத்தில் அபாயத்துக்கு ருக்கட்டும் என்று மாமல்லர் விட்டுப் ான பல்லவ வீரர்களைப் பாண்டிய ரர்களோடு சிநேகம் பிடித்துக் கூடிக் லாவும்படி செய்திருந்தார். விருந்து நம் ஆட்டம் பாட்டங்களும் கூத் ்டங்களும் நடைபெறச் செய் ருந்தார்.

மேற்படி ஆட்டம் பாட்டம் கூத் ்டங்களில் மிகவும் முக்கியமான ், பாண்டிய வீரர்களின் உள்ளத் தக் கவர்ந்து உணர்ச்சி ஊட்டி வெறி ாள்ளச் செய்ததுமான நாடகம் று இருந்தது. அதுதான் "புலி சி நாடகம்." பாண்டிய வீரர்கள் தைத்தான் அடிக்கடி பார்க்க விரும் பினார்கள். அந்த நாடகம் அடிக்கடி நடத்தியும் காண்பிக்கப்பட்டது.

நல்லது; அவ்வளவு தூரம் பாண்டிய வீரர்களின் உள்ளம் கவர்ந்த நாட கத்தை நாமுந்தான் கொஞ்சம் பார்த்து வைக்கலாமே!

இதோ திருக்கழுக்குன்றத்தின் சாரலுக்கு வந்து விட்டோம். பனை மரத் துண்டங்களைக் கால்களாக நிறுத்தி அமைத்த பரண்மீது நாடக பாத்திரங்கள் நின்று நடித்துக் கொண் டிருக்கிறார்கள். பக்கவாட்டில் பாட் டுக்காரனும் மத்தளக்காரனும் நின்று தங்கள் குரல் வலிமையையும் கை வலி மையையும் காட்டுகிறார்கள்.

பரணுக்குப் பக்கத்தில் ஒருவன் தீவர்த்தி ஏந்தி நிற்கிறான். எண் ணெய்ச் சட்டியுடன் பக்கத்தில் ஒரு வன் ஆயத்தமாயிருக்கிறான்.

கூத்து மேடைக்கு எதிரேயும் இரண்டு பக்கங்களிலேயும் கண்ணுக் கெட்டிய தூரம் போர் வீரர்கள் உட் கார்ந்து கூத்தைப் பார்த்துக் கொண் டிருக்கிறார்கள். அவர்களில் சிலருக்குக் கண்ணில் நீர் ததும்புகிறது. சிலர் தாங்கள் தேம்புவது பிறருக்குத் தெரி யாதபடி துணியினால் வாயை மூடிக் கொண்டிருக்கிறார்கள். சிலருக்குக் கை துடிக்கிறது. சிலருக்கு மீசை துடிக்கிறது. சிலருடைய கண்ணில் தீப்பொறி பறக்கிறது! அவ்வப்போது 'ஆஹாகார' சத்தங்களும், ஆங்கார ஒலிகளும் கிளம்புகின்றன.

கூத்து மேடையின் பக்கவாட்டில் நின்று இடி முழக்கம் போன்ற குர

வில் பாடுகிறவன் என்ன பாடுகிறான் என்பதைத் தெரிந்துகொள்ளச் சற்றுக் கவனித்துக் கேட்க வேண்டியதாயிருக்கிறது. கவனித்த பிறகும் அவ்வளவு தெளிவாக எல்லா வார்த்தைகளும் விளங்கவில்லை. ஆயினும் பாட்டில் புலிகேசி, சிவகாமி, ஆயனர் என்னும் மூன்று பெயர்களும் அடிக்கடி வருவதிலிருந்து, "புலிகேசி நாடக"த்திலே இப்போது "சிவகாமியைக் கொடுமை செய்த படலம்" நடைபெறுகிறதென்று நாம் ஊகித்துக்கொள்ளலாம்.

பாட்டு ஒருபுறமிருக்க, மேடையில் அச்சமயம் நடைபெறும் சம்பவமும் மேற்படி ஊகத்தை உறுதிப் படுத்துவதாயிருக்கிறது.

ஆகா! அதோ அந்தப் பயங்கரமான மீசையுள்ள மனிதன் — வாளை ஓங்கி அந்த அபலைப் பெண்ணை வெட்டப் போகும் கிராதகன் — யார்? அவன் தான் புலிகேசி போலும்! (ஆனால் இந்த நாடகப் புலிகேசி மீசையோடு காட்சியளிக்கிறான்!) அவனால் துன்புறுத்தப்படும் அந்தப் பெண்தான் சிவகாமியாயிருக்கவேண்டும்.

அவர்களுக்குப் பின்னால், சிலைகளோடு சிலையாய்க் கீழே கிடக்கும் கிழவர் யார்? சந்தேகம் என்ன? அவர் தான் ஆயனர்.

அந்தக் கிராதகன் புலிகேசியிடம் சிவகாமி தன் தந்தையின் கையை வெட்ட வேண்டாமென்றும், அவரது கையை வெட்டினால் அவருடைய உயிரே போன மாதிரிதான் என்றும், அவரை விட்டு விட்டுத் தன்னை வெட்டிக் கொன்று விடும்படியும் மன்றாடிப் பிரார்த்திக்கிறாள்.

முதலில் புலிகேசி அதற்குச் சம்மதித்தவன்போல், வாளை ஓங்குகிறான்.

திடீரென்று அவன் கத்தலை விட்டு விட்டு, "ஆஹாஹா!" என்று பேய்ச் சிரிப்புச் சிரிக்கிறான்.

"உன்னை வெட்டிக் கொல்லலாமா? நீ பல்லவ நாட்டின் பிரசித்தி பெற்ற நடன கலா ராணி அல்லவா? உன்னைக் கொல்லக் கூடாது; உன்னை உயிரோடு கொண்டு போய் வாதாபியின் நாற்சந்திகளிலே நடனம் ஆடச் செய்ய வேண்டும்!" என்று சொல்லிவிட்டு, மறுபடியும் அந்தப் படுபாவி அரக்கன் இடி இடி என்று சிரிக்கிறான்.

அவன் கையை இரண்டு தட்டு தட்டவும் நாலு சளுக்க வீரர்கள் ஓ வருகிறார்கள். சிவகாமியைக் கயிற் றால் வரிந்து கட்டி இழுத்துக்கொண் போகிறார்கள்! ஆயனர் "ஐயோ மகளே!" என்று கதறுகிறார். பு கேசி போகும்போது ஆயனரை காலால் ஓர் உதை உதைத்து விட்டு போகிறான்.

அப்போது நாடகம் பார்த்து கொண்டிருந்தவர்களின் உள்ளத்திலே ஏற்பட்ட கொதிப்பைச் சொல் முடியாது.

ஆனால் அத்தோடு விஷய முடிந்துபோய் விடவில்லை. அடுத்தா போல் காட்சி மாறியது. மேடையி முன்னால் இருவர் வந்து நின்று ஒ திரைச் சீலையைப் பிடித்துக்கொண் நிற்கிறார்கள். கூத்து மேடையில் சி மாறுதல்கள் நடக்கின்றன வென் அங்கிருந்து கேட்கும் கடபட ஒ களிலிருந்து அறிகிறோம்.

சற்றுப் பொறுத்துத் திரை சீலையை எடுத்ததும் பார்த்தால், கீ விழுந்து கிடந்த ஆயனரையு உடைந்து சூளியான சிற்பப் பது களையும் காணோம்.

ஏதோ ஒரு தெருக் காட்சி காண படுகிறது. வடக்கத்தியார்களை போல் தொங்கியும் தொப்பையுமாக தோற்ற மளித்த சிலர் நாற்சந்தியி நின்று யாருடைய வரவையோ எதி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவ களில் சிலர் மதுபானம் செய்து விட் விகாரமாக ஆடிக்கொண்டும் கூச்ச போட்டுக் கொண்டும் நிற்கிறார்க

அப்போது சிவகாமி அங்கே வ கிறாள். இரண்டு கிராதகர்கள் அவ இருபுறமும் பலவந்தமாகப் பிடித் இழுத்து வருகிறார்கள். பின்னா புலிகேசி கையில் ஒரு பெரிய சாட் யுடன் வருகிறான்.

கொடூரமான அதிகாரக் குரலி சிவகாமியைப் பார்த்து அவ "எங்கே, ஒரு ஆட்டம் ஆடு!" என் கட்டளையிடுகிறான். சிவகாமி அங் நின்ற அநாகரிக ஜனங்களைச் சுட் காட்டி, "இந்த மிருகங்களுக்கு மு னால் நான் ஆட மாட்டேன்!" என் சொல்கிறாள். உடனே, புலிகேசி த

கையிலிருந்த சாட்டையினால் அவளை அடிக்கிறான். சுளீர், சுளீர் என்று அடி விழுகிறது. ஐந்தாறு அடி விழுந்ததும், சிவகாமி சுருண்டு கீழே விழுந்து விடுகிறாள்!

* * *

அவ்வளவுதான்; நாடகம் பார்த்துக் கொண்டிருந்தவர்களுக்கிடையே அப்போது பெருத்த ஆரவாரம் ஏற்பட்டது.

“கிளம்புங்கள்! கிளம்புங்கள்!” ‘வாதாபிக்குக் கிளம்புங்கள்!” என்றும், “புலிகேசியைக் கொல்லுங்கள்!” ‘வாதாபியைக் கொளுத்துங்கள்!” என்றும் கூச்சலிட்டுக் கொண்டு அவ்வளவு பேரும் சேர்ந்தாற்போல் எழுந்தார்கள்.

சென்ற பத்து தினங்களாக மேற்படி நாடகம் நடந்த ஒவ்வொரு நாளும் முடிவில் இவ்வித ஆரவாரமும் கிளர்ச்சியும் ஏற்பட்டன. ஆனால் முந்தைய தினங்களுக்கும் இன்றைக்கும் ஒரு முக்கியமான வித்தியாசம் இருந்தது.

அது என்னவெனில், அன்றைக்கு நாடகம் முடிந்தவுடனே, பார்த்துக் கொண்டிருந்த பாண்டிய வீரர்கள் படை திரண்டு உண்மையாகவே வாதாபிக்குப் பிரயாணமானதுதான்!

ஆம்; பாண்டியர் படை மதுரைக்குத் திரும்ப வேண்டியதில்லை, வாதாபிக்குத்தான் போகவேண்டும் என்ற விஷயம் முதல் நாள் சாயங்காலம் அந்த வீரர்களுக்குக் குலச்சிறையாரால் நிச்சயமாக அறிவிக்கப்பட்டது.

யுத்தத்துக்கு என்று முன் வைத்த காலைப் பின் வைத்து மதுரைக்குத் திரும்பிப் போக அந்த மறவர் குலத்து வீரர்களுக்கு ஏற்கனவே இஷ்டமிருக்கவில்லை. அதோடு மானவன்மரின் யோசனையின்படி அவர்களுக்காக நடத்தப்பட்ட புலிகேசி நாடகத்தைப் பார்த்ததினால் உண்டான வெறியும் சேர்ந்து கொண்டது. சிவகாமி, கண்ணகியைப் போன்ற ஒரு பத்தினித் தெய்வமாகவே அவர்களுடைய உள்ளத்தில் உருவகமானாள். ஆயனர் மகளுக்குப் புலிகேசி இழைத்த கொடுமைகளை அவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் புதல்விகளுக்கோ சகோதரிகளுக்கோ இழைத்த கொடுமைகளாகவே கருதத் தொடங்கினார்கள். அந்தக் கொடுமைகளை நினைக்கும் போதெல்லாம் அவர்களுடைய இரத்தம் கொதித்து, உடனே போர்முனைக்குக் கிளம்பா விட்டால் மண்டை வெடித்து விடும் என்று பயப்படும்படி இருந்தது.

ஒரு வேளை நெடுமாற பாண்டியன் அவ்வீரர்களை மதுரைக்குத் திரும்பிப் போக வேண்டும் என்று சொல்லியிருந்தால், அவர்கள், “முடியாது: நாங்கள் வாதாபிக்குத்தான் போவோம்!” என்று சொல்லக் கூடிய மனோ நிலையில் இருந்தார்கள். நல்லவேளையாக அத்தகைய தர்ம சங்கடம் அவர்களுக்கு ஏற்படாத வண்ணம் குலச்சிறையும் மானவன்மரும் சேர்ந்து ஏற்பாடு செய்தார்கள்.

போர் வீரர்களின் மனோ நிலையைக் குலச் சிறையார் நெடுமாறனுக்கு எடுத்துச் சொல்லி அவர்களை வாதாபிக்கு அனுப்புவதே நலம் என்று கூற, அதற்கு நெடுமாறனும் இணங்கினான்.

ஆனால் ஒரு தடை குறுக்கிட்டது. வாதாபி படையெடுப்புக்கு வந்த ஒவ்வொரு சைன்யமும் இராஜ குலத்தைச் சேர்ந்த சேனாதிபதியைப் பெற்றிருக்கிறது. அப்படியிருக்க, தென் பாண்டி நாட்டு வீர மறவர் சைன்யம் இராஜ குலத்தைச் சேராத ஒருவனைச் சேனாதிபதியாகக் கொண்டு போக முடியுமா! அதை ஒரு அகௌரவமாக அவ்வீரர்கள் நினைக்கமாட்டார்களா?

இந்த ஆட்சேபத்தைப் போக்குவதற்கும் ஓர் ஏற்பாடு குலச்சிறையார் உடனே கூறினார். இலங்கை இளவரசர் மானவன்மர் ஏற்கனவே பாண்டிய வீரர்களுடைய அபிமானத்தைக் கவர்ந்திருக்கிறார். பாண்டிய குலத்தின் பரம்பரையான சிநேகிதர்கள் இலங்கை அரசர்கள். எனவே, மானவன்மரைப் பாண்டிய சைன்யத்தின் சேனாதிபதியாக்கி அனுப்பலாம் என்று கூறியதை நெடுமாறன் மகிழ்ச்சியுடன் ஒப்புக் கொண்டான். அப்படியே மானவன்மரைப் பாண்டிய சேனாதிபதியாக நியமித்தான். பாண்டிய வீரர்களும் குதூகலத்துடன் அவரைத் தங்கள் சேனாதிபதியாக ஏற்றுக்கொண்டு வீராவேசத்துடன் போர்க்களத்துக்குக் கிளம்பினார்கள்.



அத்தியாயம் 22

கமலியின் கண்ணீர்

சென்ற அத்தியாயத்தில் நாம் பார்த்த புலிகேசி நாடகத்தில், முக்கிய பாத்திரங்களாக வேஷந் தரித்து நடித்த இருவரையும் சற்றுக் கூர்ந்து கவனித்திருந்தோமானால், அவர்கள் நமக்குப் பழக்கமான பழைய சிநேகிதர்கள்தான் என்பதைக் கண்டு பிடித்திருப்போம்.

ஆம்; புலிகேசியாக வேஷந் தரித்திருந்தவன் வேறு யாரும் இல்லை; நமது ரதசாரதி கண்ணபிரான்தான்!

சிவகாமி வேஷத்தில் வந்து நடித்தது வேறு யாரோ என்று நினைக்க வேண்டாம். வேறு யார், அந்தப் பாத்திரத்தை அவ்வளவு உணர்ச்சியோடு, அவ்வளவு தத்ரூபமாக நடித்திருக்க முடியும்? கண்ணபிரானின் மனைவி ஸ்ரீமதி கமலாதேவிதான் அவள்.

கண்ணபிரான்தான் புலிகேசியாக நடித்தவன் என்பதை அறிந்த பிறகு, புலிகேசிக்கு எங்கிருந்து அவ்வளவு வாட்டமான மீசை வந்தது என்பதை அறிவதில் கஷ்டமில்லை. புலிகேசியின் முகத்தில் இருக்கவேண்டிய கொடூரம் தன் முகத்தில் இயற்கையாக ஏற்படுவது கடினம் என்பதற்காகவே



ண்ணன் அந்த மீசையை வைத்துக் டிக் கொண்டான். புலிகேசிக்கு ன்மையில் முகத்தில் மீசை யில்லா போனால் என்ன? அது இங்கே, ந்த நாடகம் பார்க்கிறவர்களில் ருக்குத் தெரியும்?

மேலே குறிப்பிட்ட நமது ஊகம் தானா என்பதை உறுதிப்படுத்திக் ாண்டு விடுவது நல்லதல்லவா? னவே, கூத்து மேடைக்கு அருகில் ந்த வேஷம் போடும் கொட்ட க்குப் போய்ப் பார்ப்போம். ன்மைதான்; கண்ணனும் கமலியும் ன் அங்கே தத்தம் வேஷங்களைக் த்துக் கொண்டிருக்கிறார்கள்.

கண்ணா! நீ போருக்குப் போகிற யத்தில் உன்னுடைய ஞாபகப் நன்றாக இருக்கும்படி செய்துவிட்டுப் போகிறாய். உன் சாட்டையடி ஒரு தடவை நிஜமாகவே விழுந்துவிட்டது!" என்று சொல்லி, கணுக் காலுக்கு மேலே சுட்டிக் காட்டினாள் கமலி.

அங்கே சாட்டை யடிபட்டுத் தோல் பிய்ந்து இரத்தம் கசிந்துகொண்டிருந்தது.

"ஐயோ! பாவி! இப்படிச் செய்து விட்டேனே? அடாடா! இரத்தம் வந்து விட்டதே!" என்று கண்ணன் அதைப் பார்த்துப் பரிதாபப்பட்டான்.

"அழகாய்த்தா னிருக்கிறது. இந்த இரத்தத்தைக் கண்டு நீ இப்படி மனங் கலங்கினால், நாளைக்கு யுத்தகளத் திலே போய் என்ன செய்வாயோ?" என்றாள் கமலி பரிகாசக் குரலில்.

"யுத்தகளத்திற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? உன்னை இந்தப் பாவி என் கையினால் அடித்துக் காயம் படச் செய்தேனே?" என்று கண்ணபிரான் மீண்டும் வருத்தப்பட்டான்.

"கண்ணா! நான் காயத்தைப் பற்றிச் சொன்னதே பிசகு. இந்த மட்டும் என் அருமைத் தங்கச்சிக்காக நான் ஏதோ ஒரு காரியம் செய்ய முடிந்ததே என்பதை நினைத்தால் எனக்கு எவ்வளவோ சந்தோஷமா யிருக்கிறது!" என்றாள் கமலி.

"அது என்னமோ உண்மைதான். நானும் அப்போது சக்கரவர்த்தியோடு போகாமல் பின் தங்கியது எவ்வளவோ நல்லதாய்ப் போயிற்று. கமலி! நானும் எவ்வளவோ கெட்டிக்கார மனிதர்களைப் பார்த்திருக்கிறேன். ஆனால், இந்த இலங்கை இளவரசரைப் போல் சமர்த்தரைப் பார்த்ததில்லை. பாண்டிய வீரர்களைத் திரும்பி மதுரைக்குப் போகாமல் தடுத்து, வாதாபிக்குக் கொண்டு போவதற்காக நம்மை இந்த நாடகம் போடச் சொன்னது என்ன அருமையான யோசனை? - நான் வாதாபியிலிருந்து திரும்பி வந்ததும் ரதசாரதித் தொழிலை விட்டு விட்டு, ஊர் ஊராகச் சென்று 'புலிகேசி நாடகம்' போடுவதென்று தீர்மானித்து விட்டேன்" என்றான்.

கமலியின் கண்களில் அப்போது கண்ணீர் ததும்பியதை அந்த மங்கலான வெளிச்சத்தில் கண்ணன் கவனிக்கவில்லை.

"கமலி! என்ன மௌனமாயிருக்கிறாய்? ரதம் ஓட்டும் தொழிலைவிட நாடகத் தொழில் நல்லது என்று உனக்குத் தோன்றவில்லையா? அது மட்டுமல்ல. வாதாபி யுத்தத்தில் ஜயித்துத் திரும்பி வந்த பிறகு நீயும் நானும் 'புலிகேசி நாடகம்' போடுவதைச் சக்கரவர்த்தியும் உன் தங்கச்சி சிவகாமியும் சபையில் இருந்து பார்க்க வேண்டும் என்று எனக்கு ஆசையாயிருக்கிறது. மானவன்மர் இதைப் பற்றி எப்படியும் மாமல்லரிடம் சொல்லி விடுவார்!" என்றான் கண்ணபிரான்.

கமலி தன் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு மெல்லிய குரலில், "இந்த ஆகாசக் கோட்டையெல்லாம் ஏன் கட்டுகிறாய், கண்ணா! முதலில் எல்லாரும் நல்லபடியாகத் திரும்பி வந்து சேருங்கள்!" என்றாள்.

• • •

மறுநாள் மத்தியானம் கண்ணன் தன் தகப்பனாரிடம் ஆசி பெற்று, மனையாளிடமும் மகனிடமும் விடை பெற்றுக்கொண்டு போர்க்களத்துக்குக் கிளம்பினான். சின்னக் கண்ணனை இலங்கை யுத்தத்துக்கு இளவரசர் மகேந்திரரோடு சேர்த்து அனுப்புவதாக வாக்குறுதி கொடுத்ததின்மேல் அவன் தந்தைக்குத் தைரியமாகப் போய் வரும்படி விடை கொடுத்தான்.

ஆனால், கடைசி நேரத்தில், அதாவது கண்ணன் புறப்படப் போகும் சமயத்தில், கமலி கண்களிலிருந்து கலகலவென்று கண்ணீரைப் பொழிந்தாள்.

கண்ணன் சிறிது அலுப்புடன், "என்ன இருந்தாலும் பெண் பிள்ளை என்பதைக் காட்டி விடுகிறாய் அல்லவா? நேற்று வரை அவ்வளவு தைரியமாய்ப் பேசிக் கொண்டிருந்தாயே? இப்போது ஏன் கண்ணீர் விடுகிறாய்? பழந் தமிழ்நாட்டு வீரத்தைப் பற்றி நீ பேசியதெல்லாம் இவ்வளவுதானா?" என்று கேட்டான்.

"கண்ணா! என்னையறியாமல் கண்ணீர் வந்துவிட்டது. மன்னித்துக்
கொள். தங்கச்சி சிவகாமியிட
கடைசி வரையில் நான் அவளுடை
நினைவாகவே இருந்தேன் என்
சொல்லு!" என்றாள்.

"என்ன சொல்கிறாய், கமலி! எ
னிடம் எதற்காக இந்தச் செய்தியை
சொல்லி அனுப்புகிறாய்? சிவகா
அம்மை இந்தக் காஞ்சி நகருக்கு வரு
போது நீயே எல்லாம் சொல்வ
தானே?" என்றான்.

கமலி அடக்க முயன்ற கண்ண
மறுபடியும் குபீரென்று பொங்கிய
கண்ணனுடைய தோளில் தன்னுடை
முகத்தை வைத்துக்கொண்டு தேம்பி
தேம்பி அழுதாள். பிறகு சிறிது ச
தானம் அடைந்து, "கண்ணா!
கோபித்துக் கொள்ளாதே! ஏ
னோ என் மனம் வேதனையடை
திருக்கிறது. என் தங்கை இந்
காஞ்சி நகருக்குத் திரும்பி வரு
காட்சியை நான் பார்ப்பேனென்
எனக்குத் தோன்றவில்லை. அதை
பார்க்க நான் விரும்பவும் இல்
அந்த நாள் வருவதற்குள் என்
இந்த உலகத்திலிருந்து கொண்
போய்விட வேண்டும் என்று ஏக
பரநாதரைப் பிரார்த்தித்துக் கொ
டிருக்கிறேன்!" என்று விம்
கொண்டே கூறினாள்.

கமலி கண்ணீர் விடுவதின் காரண
அப்போதுதான் கண்ணனுக்குப் பு
பட்டது. சிவகாமியையும் மாமல்ல
யும் பற்றி அந்தப் பேதை செய
கொண்டிருந்த மனோராஜ்ய மெல்ல
வெறுங் கனவாய்ப் போய் விட
தல்லவா? இது விஷயத்தில்
னுக்குத் தேறுதல் கூற வழி
ஆம் தெரியாமல் சற்று நே
மௌனமாயிருந்தான். கடைசி
"வேண்டாம், கமலி! வேண்டா
நீ வருத்தப்படுவதில் பயன் என்
கடவுளுடைய சித்தம் எப்படியோ
அப்படியே எல்லாம் நடக்கு
என்ற உயர்ந்த வேதாந்த தத்து
தைப் போதித்து விட்டு, கண்ண
அவளைப் பிரிந்து சென்றான்.

போகும் வழியெல்லாம், கண்
ததும்பிப் பொழிந்து கொண்டிரு
கமலியின் கண்களும் முகமுமே
ணன் மனத்தில் குடிகொண்டிருந்

சென்ற இதழில் வெளியான காலக்ஷேபத் துணுக்குக்குப் பரிசு பெற்ற
பி. என். ராஜு, 77, மாணிக்கம் பிள்ளை தெரு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

ஆலயப் பிரவேசம்



☼

உலகப் பிரசித்தி பெற்ற மதுரை ஆலயத்தில் உலகம் போற்றும் மகாத்மா பிரவேசித்து ஸ்ரீ மீனாக்ஷி அம்மனைத் தரிசித்த வைபவம்.

☼












காந்தி மகான் மதுரை மீனாக்ஷி அம்மனைத் தரிசித்து விட்டு ஆலயத்திலிருந்து வெற்றிகரமாக வெளியேறியபோது அவர் மீது மலர் மாரி பொழிந்தது!

அன்னையைத் தரிசித்த பிறகு மைந்தனைத் தரிசிக்க ரயில் ஏறுகிறார்!





✿

பழனியில் கூடி யிருந்த
பெருங் கூட்டத்தில் நில
ிய பரிபூரண அமைதி
காத்மா காந்திக்கு
க்க மகிழ்ச்சியளித்தது.

✿



அன்றிரவு ஜனக்கூட்ட நெருக்கடியின்றி மகாத்மா பழனி யாண்டவர் கோயிலுக்குச் சென்று ஸ்ரீ முருகனைத் தரிசனம் செய்தார்.

மகாத்மா கோஷ்டியைச் சேர்ந்த ஸ்ரீமதி ஸரஸ்வதி காந்திக்கு "கல்கி" பத்திரிகையின்மேல் அதிக பிரியம் என்று பழனிக் கூட்டத்தில் தெரிந்தது.









கும்ப கோணத்தில்
மகாத்மாங்கம்


அரசலாறு ஜன சமுத்திரத்தில்
மூழ்கிப் போன அதிசயம் !



Swatantra (ஸ்வதந்திரா)

[சனிக்கிழமை தோறும் வெளியாகும் வாரப் பத்திரிகை; ஆசிரியர்: ஸ்ரீ காஸா சுப்பராவ்; தனிப் பிரதி: அணு 6; வருஷச் சந்தா: ரூபாய் 16; விலாசம்: மானேஜர், 'ஸ்வதந்திரா,' 12, தம்புச் செட்டித் தெரு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.]

"உண்மையைத்தான் எழுதுவேன்; உண்மையை எழுதத்தான் எழுதுவேன்; உண்மையை எழுதக் கூடாது என்றால் ஒன்றுமே எழுத மாட்டேன்" என்று பிடிவாதம் பிடித்து, அப்படி உண்மையை எழுதும் சுதந்திரத்துக்காகச் சகல சௌகரியங்களைத் தியாகம் செய்து கஷ்ட நஷ்டங்களை அநுபவித்த எழுத்தாளருக்காக ஒரு நோபெல் பரிசு ஏற்படுத்தி யிருந்தால், அந்தப் பரிசை 1945-ம் வருஷத்தில் பூரண பாத்தியதையுடன் பெற்றுக் கொள்ளக் கூடியவர் ஸ்ரீ காஸா சுப்பராவ் ஆவர்.

ராஜாஜியைப் பற்றி உண்மையைத்தான் எழுதுவேன் என்று பிடிவாதம் பிடித்ததற்காகச் சென்ற 1945-ம் வருஷத்தில் ஸ்ரீ காஸா சுப்பராவ் இரண்டு தினசரிப் பத்திரிகை ஆசிரியர் பீடங்களிலிருந்து ராஜிநாமா செய்யும்படி நேர்ந்தது!

இவ்வாறு உண்மையை எழுதும் சுதந்திரத்துக்காகச் சென்ற வருஷத்தில் போராடிய நீரர் காஸா சுப்பராவ், இந்த வருஷ ஆரம்பத்தில் "ஸ்வதந்திரா" என்னும் பொருத்தமான பெயருடன் தம சொந்தப் பத்திரிகையை ஆரம்பித் பிப்ரவரி 16வ. முதல் இதழைக் கொண் வந்திருக்கிறார்.

முதல் இதழின் மேல் அட்டையில் உண்மையே வடிவமான காந்தி மகாத்ம "உண்மைக்கு அழிவில்லை; அஞ்ச வேண்டாம்!" என்று அபயப் பிரதானம் கொடுக்கும் தோற்றத்தில் காட்சி அளிக்கிறார்.

"பொய்மைப் பாம்பைப் பிளந்து உயிரைக் குடிப்போம்" என்று மகாகவி பாரதியார் சொன்னாரே, அந்த வாக்கை உருவகப் படுத்தும் சின்னம்,— அதாவது ஹெர்க்லீஸ் என்னும் பலிஷ்டன் தன்னைச் சுற்றி பிணைத்துள்ள பாம்புடன் போராடும் சிலை சித்திரம் — பத்திரிகையின் இலட்சியத்தை விளக்கும் சின்னமாக அமைந்திருக்கிறது.

உள்ளே புரட்டிப் பார்த்தோமானு பத்திரிகையின் முதல் இதழ் இது என் நம்புவதே கடினமாயிருக்கிறது. வெகு கா மாக நடந்துவரும் பத்திரிகையைப் போ ஒவ்வொரு அம்சத்திலும் அவ்வளவு சிறந் விளங்குகிறது.

ஜனநாயகத்தின் கீழ், பத்திரிகைகளி கடமையும் உரிமையும் யாவை என்பன முதலாவது தலையங்கம் மிகத் தெளிவா விளக்குகிறது.

அப்புறம், விக்னேசுவரப் பிரியா உடைத்திருக்கும் சிதறு தேங்காய்த் து டுகள் நகைச்சுவை பொருந்தி வெ ரஸமாயிருக்கின்றன.

அடுத்தாற்போல் 'ஸாகா' என்னு பெயரில் பிரசித்தி பெற்ற 'Side light குறிப்புகள் வழக்கம்போல் அரசியல் அ கத்தின் பக்கவாட்டுகள், மூலை முடுக்குகளெல்லாம் பிரகாசப் படுத்துகின்றன.

பார்லிமெண்டரி தூது கோஷ்டியை பற்றிய ஹாஸ்யப் பிரஸங்களின் கோவை ரொம்ப ஜோர்.

மற்றக் கட்டுரை, கதை, குறிப்பு எல்லாம் ஒரு புறம் இருக்க, இந்த இதழி நடுநாயகமாக விளங்கும் கட்டுரை ராஜாஜி விஷயமாக ஸ்ரீ காஸா சுப்பராவ் கையெழு திட்டு எழுதியுள்ள கட்டுரையாகும்.

மேற்படி நடுநாயகக் கட்டுரையி ராஜாஜிக்கு விரோதமான கிளர்ச்சி எவ்வள அபத்தமானது, எவ்வளவு தூரம் தேச மைக்குப் பாதகமானது என்பதை,கா தமக்கே உரியதான அற்புதமான நடையி அழுத்தம் திருத்தமாக எழுதியிருக்கிறார்.

ஸ்ரீ காஸா சுப்பராவ் வெறும் வாசா ...க்கிய தேசபக்தரோ, பேனா முனையி ...லயே பூரா வீரத்தையும் காட்டுகிறவரோ ...ல்ல என்பது பேயர்களில் பலருக்குத் ...தெரிந்திருக்கும். சைனா பஜார் வீதியில் ...த்லீக மறியல் செய்து போலீஸ் பிரம்பி ...ல் அநாபது அடிபட்டுச் சுருண்டு மூர்ச்சை ...யாகி விழுந்தவர். பல தடவை சிறை ...வாசமும் செய்தவர்.

இந்தியா தேசத்திற்குள்ளேயே ஆங்கில ...பாஷையை வெகு லாகவத்துடன் கையாளக் ...கூடிய அரசியல் எழுத்தாளருக்குள்ளே ...ஸ்ரீ காஸா சுப்பராவ் தலைசிறந்த ஒருவர். ...அவருடைய எழுத்தில் வழவழ, குழகுழ ...சமாசாரமே கிடையாது. அவருடைய நடை ...கணித்தரமான நடை; காரசாரமான நடை. ...ஆனால் விரஸமான மட்ட ரகங்களுக்கு ...அவர் இறங்குவது கிடையாது. அன்று ...றி மறுநாள் மறந்துவிட வேண்டிய ...'பட்டாரூட்ட' சம்பவங்களைப் பற்றி அவர் ...எழுதினாலும், அது இலக்கியத் தன்மை ...பெற்று விளங்கும். சாதாரணமாகப் பத்தி ...ரிகைகளில் வெளியாகும் விஷயங்களை

மேலெழுந்த வாரியாகப் பார்த்து 'விட்டுத் தள்ளுவதுபோல் அவருடைய கட்டுரைகளைத் தள்ள முடியாது. நிதானமாய்ப் படித்து ரஸித்து அநுபவிக்க வேண்டியவை.

இத்தகைய சிறந்த எழுத்தாளருக்கு, தாம் கண்ட உண்மையை உள்ளபடி எழுத ஒரு பத்திரிகை இல்லையென்றால், அதைக் காட்டிலும் தேசத்துக்கு நஷ்டம் வேறு கிடையாது. தேசத்தின் அதிர்ஷ்டத்தினால்தான் ஸ்ரீ காஸா சுப்பராவ் இவ்வளவு விரைவில் இந்தப் பத்திரிகையைக் கொண்டு வருவது சாத்தியமாயிற்று என்று சொல்ல வேண்டும்.

பத்திரிகையின் தனிப் பிரதி விலை அணா ஆறு என்று போட்டிருக்கிறது.

இந்த முதல் இதழின் பிரதிக்குக் குறைந்த பட்சம் ஆறு ரூபாய் கொடுத்து வாங்கலாம். 'அட்சர லட்சம்' என்ற கணக்குப்படி ஆறு லட்சம் ரூபாயும் கொடுக்கலாம். ஆனால் அவ்வளவு பணம் படைத்தவர்களுக்ுச் சுதந்திரத்திலோ உண்மையிலோ ஆர்வம் இருப்பது சந்தேகம் ஆகையால், நம்மைப் போன்ற சாமானியர்களுக்காகவே "ஆறு ரூபாய் கொடுத்து வாங்கலாம்" என்று சிபார்சு செய்கிறோம்.

புலம்பி என்ன பயன்?

சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்



"துரியோதனா! உயிருடன் இருக்கிறாயா? உன் நெஞ்சம் குளிரும். நாங்கள் செய்து முடித்ததைச் சொல்லுகிறோம், கேள்! பாஞ்சாலர்கள் அனைவரும் ஒழிந்தார்கள், பாண்டவர்களுடைய குமாரர்களும் மாண்டார்கள். இரவில் தூங்கிக் கொண்டிருக்கையில் சேனை முழுதும் எங்களால் அழிக்கப்பட்டது. பாண்டவர் பட்சத்தில் ஏழு உயிர்களே எஞ்சி நிற்கின்றன. நம்முடைய கட்சியில் கிருபரும் நானும் கிருதவர்மாவும் இருக்கிறோம்" என்றான் அசுவத்தாமன்.

துரியோதனன், "அசுவத்தாமரே! பிதாமகர் பீஷ்மரும் வீரன் கர்ணனும் செய்யாததை எனக்காகச் செய்தீர்" என்று சொல்லி விட்டுச் சந்தோஷமாக உயிர் நீத்தான்.

• • •

இரவில் எதிர்பாராத முறையில் தாக்கப்பட்டுச் சேனை அழிந்து போனதைப் பார்த்து யுதிஷ்டிரன் துயரம் மேலிட்டு "வெற்றி பெற்ற சமயத்தில் படுதோல்வி அடைந்து விட்டோம். தோல்வி அடைந்தவர்கள் வெற்றி அடைந்து விட்டார்கள். மகாசூரனான கர்ணனுடைய தாக்குதலிலிருந்து தப்பின திரௌபதியின் புத்திரர்கள், நம்முடைய அஜாக்கிரதையினால் இப்போது பூச்சிகளைப்போல் மாண்டார்கள். பெரிய கடலைத் தாண்டிய வியாபாரக் கப்பல் சிறு வாய்க்காலில் கவிழ்ந்து போவதுபோல் நாம் நாசமடைந்தோம்" என்றான்.

திரௌபதி தாங்க முடியாத சோகத்தில் மூழ்கிக் கிடந்தாள். தருமபுத்திரனிடம் வந்து "பாபியான இந்த அசுவத்தாமனை வீழ்த்த யாரும் இல்லையா?" என்று கதறினாள்.

• • •

திரௌபதியின் சொல்லைக் கேட்டதும் பாண்டவர்கள் உடனே புறப்பட்டார்கள். இங்கு மங்கும் தேடிக் கங்கை நதிக் கரையில் வியாசர் பக்கத்தில் மறைவாக இருந்த அசுவத்தாமனைக் கண்டார்கள். பாண்டவர்களையும் ஜனார்த்தனனையும் கண்டதும் அசுவத்தாமன் திகிலடைந்தான். மந்திரமும் தெய்வாஸ்திரங்களும் பயின்ற அவன் மெதுவாகக் கீழே கிடந்த ஒரு துரும்பை எடுத்து "இது பாண்டு வமிசத்தை முற்றிலு அழிப்பதாக" என்று மந்திரித்துச்சொல் அஸ்திரத்தை விட்டான். அது சென் உத்தரையின் கருப்பத்தை அடைந்தது.

பாண்டவ வம்சம் அத்துடன் அ யாளமில்லாமல் அழிந்திருக்க வேண்டு ஆனால் ஸ்ரீ கிருஷ்ணனுடைய அனுக்கிரக தால் அந்தக் கருப்பத்திலிருந்த பிண்ட காக்கப்பட்டது. அதுவே பரீக்ஷித்து ரா னாகப் பிறந்து பாண்டவ வமிசத்து அடையாளமாக நின்றது.

• • •


தான் தலையிலிருந்த ஜோதி மணி எடுத்து அசுவத்தாமன் தான் தோற் றதற்கு அடையாளமாகப் பீமனிடம் த விட்டு வனம் சென்றான். பீமன் அ மணியைத் திரௌபதிக்குக் கொடுத் "கல்யாணி! இந்த மணியை உனக்கா கொண்டு வந்தேன். உன்னுடை புத்திரர்களைக் கொன்றவன் ஜயிக்க பட்டான். துரியோதனன் கொல் பட்டான். துச்சாதனன் ரத்த மு என்னால் குடிக்கப்பட்டது. கடன்களை தீர்த்து விட்டேன்" என்று பீமசேன சொன்னான். திரௌபதி அந்த மணி வாங்கி யுதிஷ்டிரனிடம் கொடுத் வணங்கி, "குற்றமற்ற அரசர் இதை தம்முடைய முடியில் அணியத் த தவர்" என்றாள்.

• • •

அஸ்தினபுரத்தில் ஸ்திரீகளு குழந்தைகளும் புலம்பும் சப்தம் எங் கேட்டது. பல்லாயிரக் கணக்கான கற்ற பெண்களைக் கட்டிக்கொண்டு தி ராஷ்டிரன் யுத்த பூமிக்குச் சென்றா கோரமான குலநாசம் நடைபெற் அந்தக் குரு க்ஷேத்திரத்தில் குருகுல அரசன், நடந்து போனதை வெல் எண்ணி எண்ணிப் புலம்பினான். புல என்ன பயன்?



மிக நேர்த்தியான மணமும், நல்ல நிறமும், குறைந்த விலையும் உள்ள லிப்டன்ஸ் தேயிலை பெண் தேயிலைகள் இதர தேயிலைகளை விட சிறந்தவை.



லிப்டன்ஸ் தேயிலை பெண்

நேர்த்தியான இந்திய தேயிலை





உள்ளத்தின் அழகு

கிரிஜா

"பெண்களுக்கு அழகு எது?" என்று கேட்டால், "அடக்கமே பெண்களுக்கு அழகு" என்பாள் மாமியார்; "ஐந்தாம் பிறைச் சந்திரன் போன்ற நெற்றியை உடையவளே அழகி" என்பார் காவிய மியற்றும் கவி; "பெண்களின் அழகு முற்றிலும் அவர்கள் இரண்டு கருவிழிகளிலும் அடங்கி விடுகிறது!" என்று வாதிப்பார் சிறுகதை ஆசிரியர்; "பிடியில் அடங்கும் இடையும், கொடிபோல் துவளும் நடையும், சந்திர பிம்பம் போன்ற முகமும், காதளவோடிய கயல் விழிகளும்" என்று இருபது பக்கங்களில் சுருக்கமாய் வர்ணித்துக் கொண்டே போவார் நாவலாசிரியர். என்னைக் கேட்டால், "பெண்களுக்கு உண்மையில் அழகளிப்பது அவர்களது உள்ளத்தின் தூய்மைதான்" என்பேன். இது என் அனுபவத்தில் கண்ட உண்மை.


என் விவாகத்தின்போது எனக்கு வயது பதினெட்டு. மணி மூன்றுக்கே என்னை எழுப்பி, 'விரதம்' என்றெல்லாம் பிராணனை வாங்கி விட்டார்கள். எப்படியோ அந்தப் புகைப்படலத்தில், பதினெட்டு முழப் புடவையைச் சுற்றிக் கொண்டு நின்ற ஒரு பொம்மையின் கழுத்தில் மாங்கல்யத்தை முடிந்தும் விட்டேன்.

அப்புறம்தான் அந்த விபரீதம் நடந்தது. நலங்கின் போது, "ஒரு பாட்டாவது பாடித்தான் ஆக வேண்டும்" என்று பெண்ணை வற்புறுத்தினாள் என் அத்தை.

"அவளுக்குப் பாட்டே தெரியாது" என்று மறுத்துச் சொன்னாள் பெண்ணின் அத்தை.

கடைசியில், "காலேஜுக்குப் போகிற காலைக் கொடுங்கள்!" என்றாவது கேட்க வேண்டும் என்று என் அத்தை கண்டிப்பாகச் சொல்லி விட்டாள்.

"மெள்ளக் கேளம்மா!" என்று கண்ணில் நீர் ததும்பச் சொன்னார் என் மாமனார்.



அப்பொழுதே என் பெற்றோர்களுக்குச் சந்தேகம் வந்து விட்டது. எல்லோரும் ஏககாலத்தில் பெண்ணின் வாயையே கவனிக்கத் தொடங்கினர். பெண்ணும் மெள்ள வாயைத் திறந்தாள். என்ன விபரீதம்! நாக்கைச் சுழற்ற முடியாமல் திணறிக் கொண்டே, "காலேஜுக்குப்... போகிற...காலேக்..." என்று சொல்லி மேலே சொல்ல முடியாமல் நிறுத்தி விட்டாள்.

அவ்வளவுதான்; "ஊமைப் பெண் என்று சொல்லாமல் ஏமாற்றி விட்டார்களே!" என்று ரௌத்திராகாரமாக இரையக் கிளம்பி விட்டார் என் தந்தை.

"ஊமையல்ல; ஜுரமடித்ததில் நாக்கைச் சற்று இழுத்து விட்டது" என்று சமாதானம் சொன்னார் பெண்ணின் தந்தை.

இந்தச் சமாதானத்திற்கு யாரும் செவி சாய்க்கவில்லை. உடனே மூட்டையைக் கட்டிக் கொண்டு கிளம்பி விட்டோம்.

காலச்சக்கரம் சுழன்றது. கல்லூரியின் பட்டங்களை யெல்லாம் பெற்று, வைத்தியக் கல்லூரியில் இடம் பெற்றேன். அப்போது தான் சியாமளி என் வாழ்க்கையில் குறுக்கிட்டாள்! யௌவனத்தின் வாயிற்படியில் நிற்கும் எனக்கு அவள் ஒரு தெய்வ கன்னிகை போல் காட்சி யளித்தாள். கலகல வென்று பேசிச் சிரிக்கும் அவள், தன் குரல் இனிமைக்கு என்னை அடிமை யாக்கிக் கொண்டாள். அவளை மணக்க என் பெற்றோர்களின் சம்மதமும் பெற்றேன். அவளும் தன் பெற்றோர்களின் பரிபூரண சம்மதத்தை மகிழ்ச்சியுடன் எனக்குத் தெரிவித்தாள். சில தினங்களில் சியாமளியை மணக்கப் போகும் ஆனந்தத்தில் மிதந்த எனக்கு இவ்வுலகமே 'ஆனந்தப் பூங்காவன மாகக் காட்சி யளித்தது.

"மிஸ்டர் ராமநாத்! இது உண்மையா?" என்று கேட்டுக் கொண்டே நுழைந்தாள் சியாமளி. அவள் முகம் கோபத்தால் சிவந்திருந்தது. "உங்களுக்கு ஏற்கெனவே விவாகமாகி விட்டதாமே! உண்மைதானா?" என்றாள் மீண்டும் தொடர்ந்து. நான் திடுக்கிட்டேன். அவளுக்கு நான் என்ன பதிலளிப்பது? என் மௌனத்தைக் கண்ட சியாமளி, "விஷயம் எப்படி யிருந்தாலும் சரி; நான் ஒரு பெண்ணுக்குத் துரோகம் செய்ய மாட்டேன்; என்னை மன்னித்து மறந்து விடுங்கள்" என்று சொல்லி விட்டுப் போய் விட்டாள்.

என் நண்பன் சந்திரனுக்கும், சியாமளிக்கும் விவாகம் நடந்தது. என் உள்ளம் கவர்ந்த சியாமளியை இழந்த எனக்கு இவ்வுலகம் பாலைவனமாகத் தோன்றியது. என் வாழ்வையே பாழ் செய்த அந்த ஊமைப் பெண்ணின் மீது எனக்கிருந்த ஆத்திரம் பன்மடங்காகப் பெருகியது. எப்படியாவது பொழுதைக் கழிக்க வேண்டுமே என்பதற்காக என் தொழிலை நடத்தக் கொடைக்கானல் மலையைத் தேர்ந்தெடுத்தேன். அம் மலையின் சிம்பகனூரில் என் 'டிஸ்பென்ஸரி'யைத் துவக்கினேன். நோயாளிகளைக் கவனிக்கும் நேரம் போக மற்ற நேரங்களில் ஏரியைச் சுற்றுவேன். அங்கு ஜோடி ஜோடியாக நிற்கும் தம்பதிகளைப் பார்த்துப் பார்த்துப் பெருமூச் செறிவேன். என்னதான் மறக்க முயன்றும் சியாமளியின் நினைவை என்னால் மறக்கவே முடியவில்லை.

★

நாட்கள் சென்றன. ஒருநாள் மாலை 'டிஸ்பென்ஸரி'யி லிருந்து திரும்பியவன் பங்களா முன்னறையில் யாரோ அறிமுக மற்ற ஒரு பெரியவர் உட்கார்ந்திருப்பதைக் கண்டு ஆச்சரியத்துடன் அவரைப் பார்த்தேன். அப்பெரியவர், "என்னை உங்களுக்கு நினைவிருக்காது; நான் இந்தப் பெண்ணின் ஒன்றுவிட்ட மாமா" என்று தன்னைத் தானே அறிமுகப் படுத்திக் கொண்டார். அப்போதுதான் அங்கு ஒரு பெண் நிற்பதையும், அவளையடுத்து ஒரு சிறுவன் நிற்பதையும் கவனித்தேன். மீண்டும் அப்பெரியவர், "இந்தக் குழந்தைகளுக்குத் தாய் தகப்பன் இரண்டு பேரும் போய்விட்டனர்! இப்போது இவர்களுக்குக் கதி நீங்கள் தான்

எப்படியோ தேடி உங்களைக் கண்டு பிடித்து இவர்களை உங்களிடம் சேர்த்து விட்டேன்; இனி உங்கள் பாடு" என்று சொல்லி விட்டு விடுவிடு என்று வெளியே போய்விட்டார். எனக்கு விஷயம் சரியாக விளங்கச் சிறிது நேரம் பிடித்தது. "அட சனியனே!" என்று தலையிலடித்துக் கொண்டு என் அறைக்குள் நுழைந்தேன். உடுப்பைக் களைந்து கை கால்களைக் கழுவிக் கொண்டு நிமிர்ந்த பொழுது, சுடச் சுடக் காப்பியுடன் நின்றான் சிறுவன்! நான் ஆச்சரியத்துடன், "காப்பி யார் போட்டது?" என்றேன். "அக்கா!" என்றான் சிறுவன்.

வந்து பத்து நிமிஷம்கூட ஆகவில்லை; அதற்குள் இந்தக் குளிர்ப் பிரதேசத்தில் காப்பி தயாரித்து விட்டது எனக்குப் பெரும் வியப்பாகத்தான் இருந்தது. ஆயினும் என் ஆத்திரத்தில் அவ்வியப்பு ஒரு பொருட்டாகப் படவில்லை. "இன்னும் உன் அக்காவுக்கு என்ன தெரியும்?" என்றேன் ஆத்திரத்துடன். பயந்து போன சிறுவன் மெள்ள, "சமைக்க, பெருக்க எல்லாம் தெரியும்" என்றான்.

"சரி! சரி! நாளை முதல் சமையற்காரன், வேலைக்காரி எல்லோரையும் நிறுத்தி விடுகிறேன். எல்லா வேலைகளையும் உன் அக்காதான் செய்யவேண்டும். தெரிந்ததா?" என்று அதட்டினேன். பையன் பயத்துடன் தலையசைத்து விட்டு மெள்ள நழுவத் தொடங்கினான். நான் அவனைப் பிடித்து நிறுத்தி, "இதோ பார்! யாராவது உன் அக்காவை 'யார்!' என்று கேட்டால், 'சமையற்காரி' என்று சொல்ல வேண்டும்; தெரிந்ததா?" என்று அவனை உறுக்கினேன். பையன் நடுநடுங்கிப் போனான். நான் பிடியை விட்டதும் ஓடிவிட்டான்.

இரண்டு தினங்கள் வரைதான் நான் என் தேவைகளைக் கேட்க வேண்டியிருந்தது. மூன்றாவது தினம் முதல் எனக்கு வேண்டிய யாவும் தயாராகக் காத்துக் கொண்டிருந்தன. அத்துடன் மறைமுகமாக என் உடல் நலத்தில் அப்பெண் மிக்க அக்கறை செலுத்துவதை அறிந்தபோது என்னையறியாமலே என் உடல் சிலிர்த்தது. ஆயினும் இதனாலெல்லாம் அவள்மீது எனக்கேற்பட்ட மனக்கசப்பு அதிகமாயிற்றே யொழியக் குறையவில்லை. வீட்டில் சமையலுக்கு நல்ல ஆள் கிடைக்கவே, 'ஆப்ஸர் வேட்டரி' பார்க்க வரும் நண்பர்களையெல்லாம் என் வீட்டிலேயே விருந்தினராக இருக்கும்படி அழைத்தேன். ஏற்கெனவே சாப்பாட்டிற்குத் திண்டாடிக் கொண்டிருக்கும் ஆசாமிகளும் என் வீட்டைத் தங்கள் வீடாகவே பாவிக்கத் தொடங்கினர். என் மனதிற்கும் நண்பர்களுடன் பொழுதைக் கழிப்பதில் சற்று ஆறுதல் ஏற்பட்டது. அத்துடன் என் வாழ்வையே பாழாக்கிய அப்பெண்ணை வாட்டிப் பிழிவதில் எனக்குச் சற்று மனச்சாந்தியும் இருந்தது.

★

நாளடைவில் என் நண்பன் சந்திரனிடமிருந்து வந்த கடிதங்கள் வர வர சுவாரஸ்யக் குறைவாகக் காணப்பட்டன. ஒரு கடிதத்தில், 'படித்த பெண்கள் கணவனையும் ஒரு நாகரிகச் சின்னமாக நினைக்கிறார்களே தவிர, அவனுக்கு எவ்வித மதிப்பும் கொடுப்பதில்லை' என்று எழுதியிருந்ததைப் படித்தபோது எனக்கு வியப்பாகவேயிருந்தது. சியாமளியை மனைவியாகப் பெற்றவன் கூட மனக்குறைப் படுவான் என்று நான் நினைக்கவேயில்லை. திடீரென்று சந்திரனிடமிருந்து கடிதமே வரவில்லை. வெகு நாட்களுக்குப் பிறகு கொடைக்கானலில் கொஞ்ச காலம் தங்க உத்தேசித்திருப்பதாயும், ஒரு பங்களா ஏற்பாடு செய்து வைக்கும்படியும் சியாமளி எழுதியிருந்தாள்.

சியாமளியையும் சந்திரனையும் எதிர்பார்த்த எனக்கு, சியாமளி மட்டும் வந்தது ஏமாற்றத்தையும் வியப்பையும் கொடுத்தது. சியாமளி சொன்னாள் :—"உங்கள் நண்பருக்கும், எனக்கும் ஒத்துக் கொள்ளவில்லை; வாழ்க்கை முழுவதும் இப்படியே காலந் தள்ளுவது கஷ்டம் என்று பட்டதால் நான் அவரை விட்டு விலகி விட்டேன்!" என்றாள். நான் திடுக்கிட்டேன். அத்துடன் அங்கு நின்ற ஒரு புதிய மனிதரைச் சுட்டிக்காட்டி,



"இவர் என் நண்பர்; இவரும் டாக்டர்தான்" என்றான். என் தலை சுழன்றது; என் முன்னுள்ள பொருள்கள் யாவும் தலைகீழாகச் சுழன்று வந்தன. மெள்ள அவ்விடத்தை விட்டுக் கிளம்பினேன்.

சந்திரனின் கதியை நினைக்க என் மனம் பரிதபித்தது. படிப்பினாலும், அழகினாலும், இனிமையான குரலினாலும் உயர்ந்த அந்தஸ்தைப் பெற்று நின்ற சியாமளி, இன்று தன் அற்ப குணத்தினால் கேவலம் புழுவிற்குச் சமமானாள். ஒவ்வொரு பெண்ணும் சியாமளியைப் போன்றவர்கள்தானா? சீ! சீ! அவ்விதம் நினைப்பதே தவறு. இந்த எண்ணம் உண்டானபோது என் மனதில் சொல்ல இயலாத வேதனை உண்டாயிற்று. ஆம்; இதுவரை நான் அவனைக் கேவலம் சமையற்காரியாகவும், வேலைக்காரியாகவும் மதித்து வந்தேனே. அவனுடைய அன்பும் பணிவும், என்னைத் திகைக்க வைக்கும் பணிவிடைகளும் சியாமளியை விட அவன் எவ்வளவு உயர்ந்தவன் என்பதை எடுத்துக் காட்டின. உள்ளத்தின் அழகே அணிகலனாகப் பெற்று நிற்கும் அவனைப் பேச முடியாத ஒரு காரணத்திற்காகவா இத்தனை கொடுமைகளுக்கும் ஆளாக்கினேன்? இதை நினைக்க நினைக்க என் மனவேதனை அதிகரித்தது. இதுவரை தூரத்தில் தெரிந்த மின்சார தீபத்தை நிலவென்று எண்ணி ஏமாந்தேன். இன்றுதான் என்னைச் சுற்றி வட்டமிடும் உண்மை நிலவைக் கண்டேன்!

இவ்விதமான எண்ணங்களால் குழம்பிய மனதுடன் பங்களாவை அடைந்தேன். அச்சமயம் கதவைத் தட்டிக் கொண்டு நின்ற என் நண்பர் ஒருவர், உள்ளே இருந்து கேட்ட குரலுக்குப் பதிலாக, "கொஞ்சம் கதவைத் திறவுங்கள்; ஒரு புஸ்தகம் எடுத்துக்கொள்ள வேண்டும்" என்றார். அதற்கு, "அவர் வந்த பின் ... வந்து ... எடுத்துப் ... போங்கள்" என்ற பதில், வார்த்தை வார்த்தையாகவும், மிகவும் மெதுவாகவும் தான் வெளி வந்தது. ஆனால், அவன் குரலில் தொனித்த அழுத்தமும், அதிகாரமும்தான் என்னைத் திகைக்கச் செய்தன.

★

'சோ'வென்று கொட்டும் மழைச் சத்தத்தால் திடுக்கிட்டுக் கண் விழித்தேன். என் நண்பர்களனைவரும் கம்பளியை இழுத்துப் போர்த்துக் கொண்டு தூங்கிக் கொண்டிருந்தனர். தாழ்வாரத்துக் கதவை நன்றாகச் சாத்தும் நிமித்தம் எழுந்து சென்றவன், தற்செயலாக வெளிப்புறம் பார்க்கவே திடுக்கிட்டேன். அந்தக் கதவின் பக்கம் ஒண்டிக் கொண்டு நின்றான் ஐயா. அவன் புடவை முற்றும் மழைச் சாரலால் நனைந்திருந்தது; குளிரினால் அவன் உடல் நடுங்கிக் கொண்டிருந்தது. அந்தக் குளிர் தேசத்தில் படுப்பதற்கென்று பிரத்தியேகமாய்த் தயாரிக்கப்பட்ட அறைகள் இரண்டு தான் அந்தப் பங்களாவில் உண்டு. நாங்கள் படுத்துள்ளது ஒன்று; மற்றொன்று பழுது பார்ப்பதற்காகப் பிரிக்கப் பட்டிருந்தது. அப்பொழுதுதான் என் நினைவிற்கு வந்தது. சட்டென்று கதவைத் திறந்து, "ஐயா உள்ளே வந்து விடு!" என்றேன். அவன் தன் விழிகளை உயர்த்தி என்னை நோக்கினான். அடுத்த நிமிஷம் அவ்விழிகள் அறை முற்றும் சுழன்று வந்தன. புன்னகையோடு 'வர முடியாது' என்பதற்கு அடையாளமாகத் தலை யசைத்தான். — ஆம்; கால் வைக்கக்கூட இடமின்றி என் நண்பர்கள் படுத்திருக்கும் அவ்வறைக்குள் அவன் எப்படி வருவான்? — வேறு வழியொன்றும் தோன்றாததால், என் மடத்தனத்தை எண்ணி வருந்தினேன்.

மழையும் நின்று, பொழுதும் விடிந்தது. குளிரினால் நடுங்கிக் கொண்டு நின்ற ஐயாவின் உருவம் என் மனதை விட்டு அகலவேயில்லை. "பாவம்! அவன் இன்று எப்படி இத்தனை பேருக்கும் சமையல் செய்வான்?" என்று எண்ணி எண்ணி என் மனம் வருந்திற்று. என் உயிருக் குயிராக இருந்த நண்பர்கள் அனைவரும் அன்று ஏனோ எனக்கு எம சொரூபங்களாகத் தோன்றினர். சாப்பிடும் பொழுது சிப்பல் தட்டு கீழே உருண்ட சத்தம் கேட்டுத் திடுக்கிட்டேன். "அம்பி! என்னடா சத்தம்?" என்றேன். "ஒன்றுமில்லை; அக்கா தவறிப் போட்டு விட்டான்" என்ற அம்பியின் பதிலுக்குப் பின், எனக்குச் சாப்பாடு வேம்பாக இருந்தது.

★

அன்று நோயாளிகளுக்கு மருந்து சரிவரக் கொடுத்தேனா என்பது சந்தேகம் தான். வேலை முடிந்ததும் வேகமாக வீட்டிற்குத் திரும்பினேன். உள்ளே நுழையும் போதே என் கண்கள் நாலாபுறமும் சுழன்று அவன் உருவத்தைத் தேடின. வழக்கத்திற்கு மாறாக என் கால்கள் சமையலறைக்குள் சென்றன. நான் எதிர்பார்த்தபடியே ஐயா சுருண்டு படுத்திருந்தான். அவன் உடல் தணல்போல் கொதித்தது



J&N REMINDERS!

ஞாபகக் குறிப்பு

வேலையின் வகை: உயர்ந்த முறையில் சுவரின் உள் வெளிப்புறங்களை அலங்கரிக்கவும் பாதுகாக்கவும் வேண்டுமா?

அவசியமாக வேண்டியவை: சுவரின் உட்புறங்களை அலங்கரிக்கக் கண்ணைக் கவரும் பளபளப்பைத் தரும் தைலக் கலப்புள்ள "பிண்டமூர்" (Pintamur) வர்ணம் நீடித்து நிற்கக் கூடியது. தண்ணீரில் சுலபமாகக் கழுவி விடவும் கூடும். வெளிப்புறங்களைப் பாதுகாக்க செமண்டைப்போல் தோன்றும் கண்ணுக்கினிய பலவித வர்ணங்களில் கிடைக்கும் "ஜென்ஸோலைட்." (Jensolite.)



JENSON & NICHOLSON

MAKERS OF PAINTS

J&N 6193

குளிரிலும்,மழையிலும் நனைந்ததால் ஏற்பட்ட ஜுரத்தில் அவனுக்குத் தன் நினைவே யில்லை. அப்படியே அவனைத் தூக்கிக் கொண்டு வந்து, என் அறையிலிருந்த கட்டிலில் கிடத்தினேன். அன்றுதான் முதன் முதலாக என் வைத்தியத்தில் எனக்கே அவநம்பிக்கை ஏற்பட்டது! எந்த மருந்தைக் கொடுப்பதின் மூலம் ஜுர வேகத்தைச் சீக்கிரம் தணிக்க முடியும் என்ற யோசனையில் என் சக்தி முழுதும் உபயோகித்தேன். அப்போது என் மனம் பட்ட துடிப்பை எப்படி விவரிப்பது? ஐயாவின் ஜுரம் தணியப் 'பெனிஸிலின்' என்ற மருந்தை வரவழைக்க வேண்டும் என்றுங்கூட, அதன் நிமித்தம் என் ஆஸ்தி முழுதும் செலவாகும் என்றாலும் செலவு செய்யத் தயாராயிருந்தேன்.

என் சிகிச்சையின் காரணமாகவோ, அல்லது கடவுளின் அருளால்தானோ, ஐயா உயிர் பிழைத்தான். "டாக்டர் ஸார்! இனி அம்மாளுக்கு என் உதவி தேவையில்லை" என்று சொல்லிக் கொண்டே 'நர்ஸ்' வெளியேறினான். நான் மருந்தைத் தயாரித்துக் கையிலெடுத்துக் கொண்டு ஐயாவின் அறைக்குள் நுழைந்தேன். எழுந்து தன்னைச் சீர்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்த ஐயாவின் முகம், அன்றலர்ந்த தாமரையைப் போல் இருந்தது.

"ஐயா! இன்று உடம்பு எப்படியிருக்கிறது? இந்த மருந்தைச் சாப்பிடு" என்று சொல்லிக் கொண்டே அவன் அருகில் மருந்து கிளாஸை நீட்டினேன். ஐயா தலை நிமிராமலே, "உங்கள் ... கையால் ... மருந்து ... சாப்பிட்டால்... ஆயுள் ...விருத்தியாகுமே?" என்றான்.

நான் சிரித்துக் கொண்டே, "இருக்கலாம்; அதனால் என்ன?" என்றேன்.


"அப்படியானால் எனக்கு மருந்து வேண்டாம்" என்றதற்கு அடையாளமாக அவன் தலையசைத்தான். நான் ஆச்சரி[...]துடன் அவன் முகத்தை நோக்கினேன்.

"உங்களுக்கு ... இடைஞ்சலாக ... நா[...] இன்னும்...எத்தனை காலைக்கு இருக்க...


மேலே சொல்ல முடியாமல் அவன் தி[...]றினான். கண்களினின்றும் கண்[...] பொங்கி வழிந்தது. கிளாஸைக் கீ[...] வைத்து விட்டு, என் இரு கைகளா[...] அவன் முகத்தை நிமிர்த்தினேன்.

"ஐயா! இனி ஒரு நிமிஷமும் நீ என்னை[...] பிரிய விடமாட்டேன்! நான் செய்த கொ[...]மைகளை மறந்து என்னை மன்னித்து வி[...] என்று சொல்லிக் கொண்டே அ[...] முகத்தை ஆர்வத்துடன் நோக்கினேன்.

ஐயாவின் முகம் மலர்ந்தது. அவன் [...] அழகிய விழிகளை உயர்த்தி என்னைப் [...]வுடன் நோக்கினான். அப்போது அ[...] விழிகளில் பொங்கிப் பிரகாசித்த அன்[...]யும், அதனால் என் உள்ளம் கொண்[...] ஆனந்தத்தையும் எப்படி விவரிப்பேன்?



"உங்களுக் கெல்லாம் ஒற்றுமை, தேசபக்தி ஒன்றும் இ[...] யாதா? எல்லாரும் 'ஸ்ட்ரைக்' செய்திருக்கிற போது, நீங்க[...]ளும் 'காக்கா' பிடிக்க வந்து விட்டீர்களே, போங்கடா எழுந்[...]


இன்னும் ஒருபடி முன்னேற்றம்
முற்றுப் பெற்ற வியாபாரம்
1945
5·50
கோடிக்குமேல்
1944
4·74 கோடிகள்
1943
2·85 கோடிகள்
நாஷனல்
இன்ஷ்யூரன்ஸ், கம்பெனி லிமிடெட்
7, கவுன்ஸில் ஹவுஸ் ஸ்டிரீட், கல்கத்தா
மதராஸ் பிராஞ்சு: "நாஷனல் இன்ஷ்யூரன்ஸ் பில்டிங்"
362, சைனாபஜார் ரோடு, எஸ்பிளனேட்
சப் ஆபீஸ்கள்: பெங்களூர் :: மதுரை
N.I.F-TA 6



சொல்லு குறியப்பா!

'காட்டூர் கண்ணன்'

★

சொல்லு குறியப்பா — சொக்கப்பா! வீரப்பா!
நல்ல குறி சொல்லு — நான் கேட்க நீ சொல்லு!
வெல்லு குறி சொல்லு! — விளக்கமாய் நீ சொல்லு!
நில்லு முல்லு பண்ணாமே — சீராகவே சொல்லு!

தூதாக வந்தாங்க — தொரைமார்கள் ஒன்பது பேர்
போதாக்குறைக்கு ஒரு — பொம்பிளையும் கூடவந்தா!
ஆதாரம் காணவந்தான் — அங்கே இங்கே போறாங்க!
இளநீரைக் குடிச்சாங்க — இனிக்குதுன்னு சொன்னாங்க!

பட்டணத்தைப் பாத்தாங்க — பட்டிக்காடும் கண்டாங்க!
காந்தி, ஜின்னா, ராஜாஜி — காத்தான் கருப்பன் வரை
வட்டமிட்டு ஊரூராய் — வலம்வந்து பிடித்தாங்க
பேட்டிதான் கண்டாங்க — கேள்வியெல்லாம் போட்டாங்க!


குனிந்து குடிசையிலே — கும்பிருட்டைப் பாத்தாங்க
அடிச்சு உதறிக்கிட்டு — 'ஆஹாஹா' என்னாங்க!
கனிந்துருகிக் 'கடனுண்டா? — கஷ்டங்கள் உண்டா?'ன்னு
உடனேயே தீர்ப்பதுபோல் — உருக்கமுடன் கேட்டாங்க!

சுயராச்சியம் வேணுமான்னு — சோபியிலே கையைவிட்டு
சுண்டிக் கொடுப்பதுபோல் — சுருசுருப்பாக் கேட்டாங்க
மவராசன் மவனுங்க — மரியாதையாக் கொடுத்து
வந்தவழி போனாக்கே — வழிமறிச்சு நிக்கறோமா?

பாட்டாளி மக்களுக்காய் — பரிஞ்சு கொஞ்சம் பேசினாங்க
பாகிஸ்தான் கேட்பதிலே — பலனில்லே என்று சொல்லி
நாட்டிலே ஒற்றுமையை — நாட்டவேணும் என்னாங்க!
ஏட்டுச் சுரையாமோ — ஏதும் பலித்திடுமோ?

சீராய் சுதந்திரத்தை — சீக்கிரமாய் வாங்கித்தர
சீமைக்குப் போய்முயற்சி — செய்திடுவோம் என்னாங்க
ஏரோப்பிளேன் ஏறி — எல்லோரும் போய்ட்டாங்க
வாராய் நீ சொக்கப்பா! — வாகாய்க் குறி சொல்ல

வாக்குப் பலித்திடுமோ — வந்து சொல்லிப் போனவங்க
நாக்குப் புரண்டிடுமோ — நாளும் மறந்திடுமோ
போக்குப் புலப்படல்லே — கேக்க வந்தேன் உன்னிடத்தே
பாக்கோடே வெத்திலையும் — பழங்காசும் வைச்சிருக்கேன்
சொல்லு குறியப்பா! சொக்கப்பா! வீரப்பா!



மதுரையில்



சாவி

பிப்ரவரி முதல் தேதி வெள்ளிக்கிழமை இரவு 'ஸ்பெஷல்' ரயில் எழும்பூர் ஸ்டேஷனை விட்டுப் புறப்படு முன் அது 'ஸ்பெஷல்' ரயில்தானா என்பதைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு என்ஜின் பக்கம் போனேன்.

"யார் நீ?" என்று கேட்டார் ஒரு ரயில்வே அதிகாரி.

"நான் யார் என்பது மிக்க ரகசியம். நான் மகாத்மாஜியுடன் அவருடைய ஸ்பெஷல் ரயிலில் போகப் போகிறேன் என்பதும் முக்கிய ரகசியம். ஆகையால் இந்த ரயில் எங்கே போகிறது என்பதை மட்டும் சொல்ல வேணும்" என்று கேட்டேன்.

ரயில்வே அதிகாரியும் பதிலுக்கு, "இந்த ரயில் மகாத்மா காந்திக்காகப் போகும் 'ஸ்பெஷல்' என்பது ரொம்ப ரகசியம். இது 10-மணிக்குப் புறப்படப் போகிறது என்பது அதைவிடப் பரம ரகசியம். ஆகையால் நான் இந்த ரகசியங்களையெல்லாம் உமக்குச் சொல்ல முடியாது" என்றார்.

எனவே, அந்த ரகசிய வண்டியில் நான் யாருக்கும் தெரியாமல் ஏறி 'கப்சிப்' என்று ஒரு மூலையில் போய் உட்கார்ந்து கொண்டேன். எனக்கு முன்பாகவே இன்னும் பல பத்திரிகை நிருபர்களும் பிறரும் ரகசியமா வந்து உட்கார்ந்துகொண்டிருந்தார்கள்.


ரயிலும் ஊதாமல் கொன்னாமல் சரியா பத்து மணிக்குப் புறப்பட்டு, இன் 'லெவல் கிராஸிங்' பக்கத்தில் போ அதி ரகசியமாக நின்றது.

நாங்கள் இவ்வளவு ரகசியமாகப் போகு விஷயத்தை மகாத்மாஜியும், ராஜாஜி எப்படியோ தெரிந்து வைத்துக் கொண் அங்கே வந்து காத்துக்கொண்டிருந்தார்க போனால் போகிறதென்று சொல்லி அ களையும் ஏற்றிக் கொண்டோம்.

ரயில் சென்னைக்கு 25 மைல் தூர லுள்ள காட்டுப் பாக்கத்தில் போய் நின் தும் நாங்கள் படுத்துத் தூங்குவத ஆயத்தமானோம். ஆனாலும், ஒருவராவ நிம்மதியாகத் தூங்க முடியவில்லை. காரண இவ்வளவு ரகசியமாக நாங்கள் போயிருந் கூட, காட்டுப் பாக்கம் கொசுக்கள் எங்க எப்படியோ கண்டு பிடித்து விட்டது தா

விடியற்காலம் மணி நாலு அடித்தவுட நான் காந்திஜி சரியாகத் தூங்குகிறா என்று கவனிப்பதற்காக அவர் ஏறியிரு வண்டியினருகில் போய்ப் பார்த்தே

மகாத்மா



ாந்திஜி உட்கார்ந்தவாறே நிம்மதியாகத் ாங்கிக் கொண்டிருந்தார். அவருக்குச் சமீ த்தில் உட்கார்ந்து கொண்டிருந்த ராஜாஜி ன்னைக் கண்டதும் "இங்கே எங்கே வந் ாய்?" என்று கேட்டார். "மகாத்மாஜி சௌகரியமாகத் தூங்குகிறாரா என்று ார்த்து விட்டுப் போக வந்தேன். அவர் ிம்மதியாகத்தான் தூங்குகிறார். தாங்கள் ான் கண் விழித்துக் கொண்டு உட்கார்ந் ருக்கிறீர்கள்......" என்றேன்.

ராஜாஜி சிரித்துக் கொண்டே, "காந்திஜி ங்க வில்லை. மணி நாலு ஆகி விட்ட ல்லவா? அதனால் கண்களை மூடிக் கொண்டு லைப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருக் றார்!" என்றார்.

"ஓஹோ!" என்று சொல்லிவிட்டுத் ரும்பும்போது, அங்கே வந்த ஹரிஜன சேவா சங்கக் காரியதரிசி ஸ்ரீ எல். என். ாபாலசாமி, "இன்னும் அரைமணி நேரத் ல் வண்டி புறப்படப் போகிறது. வெந்நீர் யாராக இருக்கிறது. ஸ்நானம் செய்கிற ர்கள் செய்யலாம்" என்றார்.

அவ்வளவுதான்; வண்டியிலிருந்த எல் லாரும் அங்கே தயாராயிருந்த வெந்நீரில் ஸ்நானம் செய்து விட்டு வண்டி ஏறி னும். பின்னர், வண்டி விழுப்புரம் ாய்ச் சேருவதற்கும், கிழக்கே சூரியன் தயமாவதற்கும், எஸ். ஐ. ஆர். ஓட்டல் சிப்பந்திகள் எங்களுக்கு இட்டிலி காப்பி கொண்டு வந்து வைப்பதற்கும் சரியாக இருந் தது. விழுப்புரத்துக்கு அடுத்த படியாக வண்டி உளுந்தூர்ப்பேட்டை, விருத்தாசலம், அரியலூர், லால்குடி, ஸ்ரீரங்கம், பொன் மலை, திருச்சி, கொடைக்கானல் முதலிய பல ஸ்டேஷன்களில் நின்றது. மூக்கால்வாசி ஊர்களில் வண்டியை ஸ்டேஷனை அடுத்த 'லெவல் கிராஸிங்' அருகில் உள்ள மைதானங்களில் நிறுத்தினார்கள். அங் கங்கே கூடியிருந்த ஜனங்களுக்கு மகாத் மாஜி இரண்டு நிமிஷ நேரம் பிரசங்கம் செய்தார். இரண்டு நிமிஷ நேரம் ராமநாம பஜனை நடத்தினார். ஐந்து நிமிஷ நேரம் ஹரிஜன நிதிக்குப் பண வசூல் செய்தார்.

* * *

ஏற்கெனவே குறிப்பிட்ட இடங்களைத் தவிர ரயிலை அதிகப்படியாகச் சில இடங் களிலும் நிறுத்தும்படி ஆயிற்று.

சாத்தக் கூடல் என்ற கிராமத்தில் ரயில் நிற்காது என்று தெரிந்திருந்தும்கூட அந்த ஊரைச் சேர்ந்த ஆயிரத்துக்கு மேற்பட்ட ஹரிஜனங்கள் மகாத்மாஜியின் படத்தை விமானத்தில் வைத்து உத்ஸவ விக்ரகம் போல் ஜோடித்துக் கோவில் குடையைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தார்கள். (அப்போது அவர்களுக்கிருந்த உற்சாகத்தில்

மகாத்மாஜி தலையின்மீது சுரீரென்று அடித்த வெய்யிலைக்கூட யாரும் கவனிக்க வில்லை!) மகாத்மாஜி மேற்கண்ட காட்சியைக் கண்டதும் வண்டியை நிறுத்தச் சொல்லி அங்கே ஒரு நிமிஷ நேரம் ரயில் வண்டியிலேயே ஓரத்தில் இணைத்திருந்த பிளாட்பாரத்தில் வந்து நின்று தரிசனம் தந்தார்.

ரயில் ஓடும்போது பாதைக்கு இருபுறங்களிலும் வழி நெடுக ஜனங்கள் வரிசை வரிசையாக நின்று கொண்டிருந்தார்கள். கூட்டம் கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள். பனைமரங்கள், புளிய மரங்கள், கைகாட்டி மரங்கள், தந்திக் கம்பங்கள் மீதெல்லாம் ஏறி நின்று மகாத்மாஜியின் தரிசனத்துக்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். மேலே வெய்யிலென்றும், கீழே வெள்ளமென்றும் பாராமல் கால் கடுக்கக் காத்துக் கொண்டிருந்தார்கள்.

காந்திஜி வண்டிக்கும் பத்திரிகை நிருபர்கள் உட்கார்ந்து கொண்டிருந்த எங்கள் வண்டிக்கும் வித்தியாசம் தெரியாத கூட்டத்தினரில் சிலர் மகாத்மாவுக்காகக் கொண்டு வந்த இளநீர், சாத்துக்கொடி, ஆரஞ்சு முதலிய பழங்களை எல்லாம் எங்களிடம் கொடுத்து விட்டுப்போனார்கள். வேறு சிலர் காந்திஜிக்கு அன்புக் காணிக்கையாக சமர்ப்பிக்கும் பொருட்டுக் கொண்டுவந்திருந்த கதர் நூல் சிட்டங்களை வண்டி நகரும் அவசரத்தில் என்னிடம் கொடுத்துவிட்டு "இதைக் காந்திஜியிடம் சேர்த்து விடவேண்டும்" என்று கேட்டுக் கொண்டனர்!

நானும் 'ஆகட்டும்' என்று கூறி விட்டுப் பின்னால் சாடு திரிப்பதற்கு உதவும் என்று வாங்கி வைத்துக் கொண்டேன்.

கொடைக்கானல் தாண்டியதும் வண் எந்த இடத்தில் போய் நிற்கப் போகிறத மகாத்மாஜி எங்கே இறங்கி எப்படிப் போக போகிறார் என்று நாங்களெல்லாம் யோசி துக் கொண்டிருந்த சமயம் மதுரைக் எட்டு மைல் தூரத்திலுள்ள சமயநல்லூ என்ற ஒரு சிறு கிராமத்தில் நின்றது. மகா மாஜி, ராஜாஜி, சுசீலா நய்யார், பியாரிலா முதலியவர்கள் கீழே இறங்கினார்கள்.

அங்கே மகாத்மாஜியை எதிர் கொ டழைக்க மதுரை ஸ்ரீ ஏ. வைத்தியநாதய்ய ஸ்ரீ சுப்பராமன் ஆகியவர்கள் வ காத்துக் கொண்டிருந்தார்கள்.

சமயநல்லூருக்கு அடுத்தபடியாக வண் வேளாக்குடியில் போய் நின்றது. வேளா குடி ஸ்டேஷனில் எங்களையும், காந்தி கோஷ்டியையும் அழைத்துச் செல்லத் தய ராய் நின்ற மோட்டார்களில் ஏறிக் கொ டோம். அவ்வளவுதான் வேளாக்குடியி ஆரம்பித்த கூட்டம் மதுரை போய் சேரும்வரை சாலைகளின் இரு புறங்களி காந்தி மகான் தரிசனத்துக்காக ஜே, என்று காத்துக் கொண்டிருந்தது. அவ ருக்கெல்லாம் காந்திஜி பின்னால் வருகிற என்று பதில் சொல்வதற்குள் எங்க தொண்டை கூடக் கம்மிப் போய்விட்டது

* * *


இடையில் அனைவரும் பிரார்த்த மைதானத்துக்குப் போய்ச் சேர்ந்தோ அங்கே கண்ட காட்சியைப் பற்றி கா என்னத்தைச் சொல்ல?


மைதானத்தில் வெகுதூரத்துக்கு வெ தூரம்வரை கட்டியிருந்த மின்சார விளக்கு தோரணங்கள் ஜகஜ்ஜோ யாகப் பிரகாசித் கொண்டிருந்தன.

மேடை மீது ஏறிக் னித்தேன். நாலாபுறமு கண்ணுக் கெட்டிய தூ வரை இன்னும் அப்பா அதற்கும் அப்பால், அ வானம் பூமியைத் தொ டுக் கொண்டிருக்கும் இட வரை ஒரே ஜன ச திரமா யிருப்பதைக் க என் தலை சுழன்றது. ம கம் போட்டுக் கீழே விழ தற்கு இடவசதி இல் யாகையால் பேசா இருந்து விட்டேன்.

இத்தகைய பிரம்மாண் மான ஜன சமுத்திரத்தி

ஐந்து லட்சம் மக்களுக்கு மத்தியில் இந்த அலங்கார மேடையில் நின்று மகாத்மா சிறிது நேரம் பேசினார்; சிறிது நேரம் நிம்மதியாகத் தூங்கினார்!





மதுரை மீனாக்ஷி அம்மனின் திரு ஆபரணங்கள், மகாத்மா காந்தியின் பேட்டிக்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன!

கண்டிப்பாய் மதுரைமா நகரம் அமிழ்ந்து விடத்தான் போகிறது என்று நினைத்த போது, எனக்கு அந்தப் பழைய பரமசிவனைக் காட்டிலும் பன்மடக்கு பயம் ஏற்பட்டு விட்டது.

* * *

ஹிமாசலத்தின் மீது நடந்த பார்வதி பரமேசுவரன் திருமணத்துக்கு அகில உலகத்தி னின்றும் வந்து குழுமிய ஜனக் கூட்டத்தைக் கண்டதும் பரமசிவன் எங்கே இமயமலை பாதாளத்துக்குள் அமுங்கிப் பூமி நிலை கவிழ்ந்து விடுமோ என்று பயந்து அகஸ்திய முனிவரைப் பொதிகை மலைக்குப் போகச் சொன்னாரல்லவா?

பரமசிவன் கலியாணத்தின்போது இமய மலைக்கு ஏற்படவிருந்த அதேமாதிரியான பேராபத்து மகாத்மாஜியின் விஜயத்தின்போது மதுரைமா நகரத்துக்கும் ஏற்படவிருந்தது. மகாத்மாஜியை தரிசிப்பதற்காக மதுரைப் பிரார்த்தனை மைதானத்தில் கூடியிருந்த லட்சக் கணக்கான மக்களைக் கண்டதும் நான் உடனே பொதிகை மலையிலிருக்கும் அகஸ்திய முனிவரைக் கூப்பிட்டு வடக்கே போகச் சொல்லலாமா என்று யோசித்தேன். அதற்கு நேரமில்லை யாகையால் அகஸ்திய முனிவரை அனுப்புவதைவிட வந்த முனிவரையே அந்த இடத்தை விட்டுக் கிளப்பி விட்டால் கஷ்டம் தீர்ந்து போகும் என்று கருதி மகாத்மாஜி உட்கார்ந்து கொண்டிருந்த பக்கம் திரும்பிப் பார்த்தேன்.

இது என்ன கூத்து! மகாத்மாஜி தமது மேல் துண்டை மேடை மீது விரித்துப் படுத்துக் கொண்டிருந்தார்.

"பாபூஜி! கூட்டம் அசாத்தியமாயிருக்கிறது. எழுந்திருங்கள். இல்லா விட்டால் ஆபத்தாய் முடியும்" என்றேன்.

மகாத்மா கண் விழித்து, "ஜனங்கள் எல்லோரும் அமைதியாகக் கலைந்த பிறகு தான் நான் எழுந்து வருவேன்" என்று கூறி மறுபடியும் படுத்துக் கொண்டார்.

அப்புறம் தொண்டர்கள் சிலர் மூங்கில் வாரைகளைக் கொண்டு வந்து நீளவாட்டில் பிடித்துக் கூட்டத்தினரை விலக்கிக் கொண்டே மேடைவரை சென்று "இதோ வழி போட்டு விட்டோம். மகாத்மாஜி எழுந்து கீழே இறங்கி வரலாம்" என்றனர்.

காந்திஜி எழுந்து பார்த்து விட்டு, "இது பலாத்காரத்தினால் போடப்பட்ட பாதை ஆகையால் நான் வர முடியாது. ஜனங்கள் தாங்களாகவே சாந்தமாகக் கலைந்து மைதானம் காலியானால் ஒழிய நான் எழுந்திருக்க முடியாது" என்று கண்டிப்பாகச் சொல்லிச் சத்தியாக்கிரகம் செய்தார்.

ஜனங்களோ, மகாத்மாஜி எழுந்து போகும்வரை தாங்களும் மைதானத்தை விட்டு நகருவதில்லை என்று பிடிவாதம் பிடித்து அங்கேயே இருந்தார்கள். இப்படி மகாத்மாஜிக்கும் கூட்டத்துக்கும் நடந்த சத்தியாக்கிரகப் போராட்டமானது கடைசியாக ஒன்பது மணிக்குத்தான் முடிவுற்றது.

பிரார்த்தனைக் கூட்டத்தையும் அதன் மத்தியில் அமைக்கப்பட்டிருந்த மேடை மண்டபத்தையும் கவனித்தபோது, அந்தக் காட்சி ஏதோ ஒரு பெரிய சமுத்திரத்துக்கு மத்தியில் உள்ள தீவைப்போல் காணப்பட்டது.

மேடையின் நாலா பக்கங்களிலும் உட்கார்ந்திருந்த ஜனங்களுக்கு மகாத்மாஜியைச் சரியாகப் பார்க்க முடியவில்லை. எனவே, காந்திஜி, எல்லோரும் தன்னைக் காண வேண்டுமென்பதற்காகச் சுற்றி யிருந்த கம்பங்களைப் பிடித்துக் கொண்டே எல்லாத் திசைகளுக்கும் சென்று அங்கங்கே சிறிது நேரம் நின்று தரிசனம் தந்தார்.

ஒவ்வொரு திசையிலும் அவர் வந்து நிற்கும்போது அந்தப் பக்கத்தில் உள்ள

ஜனங்கள் அமைதியா யிருந்தார்கள். மற்றப் பக்கங்களிலிருந்து மட்டும் சப்தம் வந்து கொண்டே யிருந்தது. மகாத்மாஜி, "நான் எந்தப் பக்கத்தில் நின்று பேசுகிறேனோ அந்தப் பக்கத்திலுள்ளவர்கள் மட்டும் நிச்சப்தமா யிருக்கிறார்கள். நான் வேறொரு பக்கம் போனதும் அவர்களும் பேச ஆரம்பித்து விடுகிறார்கள். இப்போது நான் அடுத்த பக்கம் போகிறேன். ஆகையால் இங்கே உள்ளவர்கள் இனிப் பேசாமல் இருக்க வேண்டும்!" என்றார். அப்போது அமைதியாக இருந்த கூட்டத்தில் எழுந்த சிரிப்பின் அலையோசை அடங்குவதற்கு ஐந்து நிமிஷ நேரம் ஆயிற்று! மேலும் மகாத்மாஜி, "நீங்கள் யாவரும் அமைதியாக இருக்கவேண்டும். அன்பின் காரணமாகத் தான் நீங்கள் இப்படி லட்சக்கணக்கில் என்னைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்கிறீர்கள். அன்புக்கு அறிகுறியாக வேறு எவ்வளவோ காரியங்கள் செய்யலாம். ஆகையால் நாளைய தினம் யாரும் என்னை ஆலயத்துக்குள் போக முடியாதபடி கோவிலருகில் கூட்டம் போட்டு இடைஞ்சல் செய்யவேண்டாம். நான் போகுமிடத்துக்கு என்னை யாரும் பின்பற்றி வர வேண்டாம்" என்று கேட்டுக் கொண்டார்.

ஆனால், மகாத்மாஜியை மற்றெல்லா விஷயங்களிலும் பின் பற்றும் பொது ஜனங்கள் அவர் போகு மிடங்களையும் பின்பற்றத் தான் செய்தார்கள்!

* * *

மறு நாள் 3உ ஞாயிற்றுக்கிழமை காலை ஆறு மணியிலிருந்தே மதுரை வாசிகளும், வெளியூர் வாசிகளும் மகாத்மாஜி தங்கியிருந்த சிவகங்கை பங்களா வாசலை முற்றுகை யிட்டு விட்டார்கள். தெருவெல்லாம் வண்டி போக முடியாதபடி கூடி யிருந்தார்கள். கோயிலுக்கு வெளியே மாசி வீதிகளையும் ஆக்கிரமித்திருந்தார்கள். கோயிலுக்குள்ளே போனால் அங்கேயும் ஜனநாயகம்தான்!

மகாத்மாஜி சரியாக எட்டு மணிக்கு ஆலயத்துக்குள் பிரவேசித்தார். அந்தச் சுபயோக சுபவேளையில் ஆலாட்ச மணிகள் கண கண வென்று அடித்தன. யானைகள் பிளிறின. மேளவாத்தியங்கள் முழங்கின.

கண்கண்ட தெய்வமான காந்தி மகான் பொற்றாமரைக் குளத்தை வலமாக வந்து முறையே, விநாயகர், மீனாட்சி அம்மன், சுந்தரேசுவரர், நடராஜர், சுப்பிரமணியர் முதலிய தெய்வங்களைத் தரிசனம் செய்து தமது பெயரால் அபிஷேக அர்ச்சனைகளும் செய்தார். பின்னர் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் காட்சி அளித்துவிட்டு, கீழ் கல் தரையில் செதுக்கப்பட் டிருக்கும் திருமலை நாயக்கரின் சிலையைத் தம்முடைய பாதங்களால் புனிதப் படுத்தினார் (யாத்ரீகர்களின் பாததூளி படவேண்டு மென்பதற்காகவே திருமலை நாயக்கரை கீழ தரையிலுள்ள கல்லில் செதுக்கி வைத்திருக்கிறார்களாம்! ஆனால் இன்றைய தினத்தான் அச்சிலை உண்மையாகவே புனிதம் அடைந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

இதெல்லாம் முடிந்ததும் மகாத்மாஜியைக் கல்யாண மண்டபத்துக்கு அழைத்துச் சென்றார்கள். அங்கேதான் மீனாட்சி அம்மனுக்குச் சொந்தமான ஏராளமான திரு ஆபரணங்கள் இருந்தன.

"மகாத்மாஜியை அங்கே ஏன் அழைத்து போகிறீர்கள்? அவர் பாட்டுக்கு எல்லா நகைகளையும் ஹரிஜன நிதிக்குக் கொடுத்து விடுங்கள் என்று கேட்டாலும் கேட்பார்" என்று கோயில் நிர்வாகிகளிடம் எச்சரித்து பார்த்தேன்; அவர்கள் கேட்கவில்லை. நல்ல வேளையாக மகாத்மாவும் மீனாக்ஷி அம்மனின் நகைகளைக் கேட்கவில்லை.

ஏராளமான தங்க நகைகளுக்கும் ந ரத்தின ஆபரணங்களுக்கும் இடையே ந நாயகமாய் விளங்கிய ஒரு பதக்கம் எ கண்ணைக் கவர்ந்தது.

அது என்னவென்று விசாரித்தேன்.

"நீல நாயகம்!" என்று பதில் வந்தது.

நீல நாயகம் என்ற அந்த அற்புத அழ வாய்ந்த பதக்கத்தை ஜனச் சக்கரவர்த் அரசாண்ட காலத்தில் மீனாட்சி அம்மனுக்குப் பரிசாகக் கொடுத்து விட்டாராம்.

ஜனச் சக்கரவர்த்தி அளித்த மேற்ப பதக்கத்தை ஒரு தடவை ஏழாம் எட்வர் சக்கரவர்த்தி மதுரைக்கு வந்திருந்தபோ பார்த்து விட்டு ஆச்சரியப்பட்டுப் போ ராம்! உடனே அந்தப் பதக்கத்தை அ தமது தாயார் விக்டோரியா மகா ராணிக்குக் காட்ட வேண்டுமென்று சொல்லி கையோடு எடுத்துக் கொண்டு போனாராம் எடுத்துக் கொண்டு போனவர் (என் ஆச்சரியம்!) பத்திரமாகத் திருப்பி அனுப்பிவிட்டாராம்! மீனாக்ஷி அம்மனுடை சொத்து விஷயத்தில் எல்லாருமே ஜாக்கிரதையா யிருப்பார்கள் போலிருக்கிறது!

* * *

மதுரை யாத்திரை முடிந்து பழ போய்ச் சேரும்போது மணி ஐந்தரை ஆ

விட்டது. பழனிக்குப் போகும் மார்க்கத்தில் திண்டுக்கல்லில் பிரமாதமான கூட்டம் கூடி மகாத்மாஜியை வரவேற்றார்கள். திண்டுக்கல் தாண்டி, ரயில் ஒட்டன் சத்திரத்தில் நின்றபோது வண்டிக்குள் உட்கார்ந்து கொண்டிருந்த எனக்கு ஒரே ஆச்சரியமாய்ப் போய்விட்டது.

சாதாரணமாக ஒரு குறிப்பிட்ட இடத்தில் ரயில் நிற்கப்போகிற தென்றால் மேற்படி இடத்தை நெருங்கும்போது அங்கு ஒரே கூச்சலும் கோஷமுமாக இருப்பதுதான் வழக்கம்.

ஒட்டன் சத்திரத்தில் இந்த அனுபவத்துக்கு முற்றிலும் நேர்மாறாகப் பரிபூர்ண அமைதி நிலவியது. இவ்வளவுக்கும் கூட்டம் சாதாரணக் கூட்டமாயில்லை. பதினைந்தாயிரம் பேர்கள் கொண்ட மிகப் பெரிய கூட்டம்தான்.

மகாத்மாஜி, "இந்தமாதிரி ஒழுங்கான கூட்டத்தைப்போல் என்னுடைய யாத்ரா மார்க்கத்தில் நான் இரண்டொரு இடங்களில்தான் கண்டேன். இதைப்போல் நாற்பது கோடி மக்களும், ஒற்றுமையாகவும் சாந்தமாகவும் இருந்தால் சுதந்திரம் மறுநாளே கிட்டி விடும்" என்று கூறினார்.

பழனி பிரார்த்தனை மைதானத்தில் லட்சம் பேர்களுக்குமேல் கூடியிருந்தார்கள். அங்கே நிச்சப்தமாக இருந்து மகாத்மாவின் பிரசங்கத்தை அமைதியாகக் கேட்டு விட்டுப் பிறகு மலையடிவாரத்துக்குப் போனார்கள். காரணம், அங்கே மகாத்மாஜி வரப் போகிறார், மலை மீது ஏறிப் பழனியாண்டவனைத் தரிசிக்கப் போகிறார், அப்போது காந்தி மகானைத் தரிசிக்கலாம் என்ற ஆசைதான்!

ஆனால் மகாத்மாஜியோ பழனிக் கோயிலுக்குப் போவதே சந்தேகமாயிருந்தது. எங்கே மதுரையைப் போல் பழனிக் கோயிலுக்குள்ளும் ஜனக் கூட்டம் கூடி ஆண்டவன் தரிசனத்துக்கு இடைஞ்சல் ஏற்படுத்துவார்களோ என்ற காரணத்தினால் முதலில் கோயிலுக்குப் போவதற்கே மறுத்து விட்டார். கடைசியாக, தக்கர் பாபா முன் கூட்டியே கோயிலுக்குப் போய்ப் பார்த்து விட்டு வந்து, "தாங்கள் வரலாம்; கூட்டம் அதிக மில்லை; இருக்கிறவர்களும் ஒழுங்காக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்" என்று மகாத்மாஜிக்கு உறுதி கூறியபின் பேரிலேயே மகாத்மாஜி ஒப்புக்கொண்டார். பிறகு, சரியாக எட்டு மணிக்கு மகாத்மாஜியும், ராஜாஜியும் பல்லக்கில் ஏறி மலைமீதுள்ள ஆண்டவன் சந்நிதிக்கு வந்து சேர்ந்தார்கள்.

நானும் இன்னும் சிலரும் படிக்கட்டு ஏறி மலை உச்சியை அடைந்தோம்.

என். ஐ. ஆர். பிளாட்பாரம் படிக்கட்டுகளைத் தவிர அதுவரை எனக்குச் சேர்ந்தாற்போல் அத்தனை படிக்கட்டுகள் ஏறிப் பழக்கம் கிடையாது. எனவே, மலையுச்சியை அடைவதற்குள் என் கால்கள் கீரைத்தண்டு போல் துவள ஆரம்பித்து விட்டன.

"குறுக்கிலும் நெடுக்கிலும் மூலைவாக்காக நடந்து போனால் காலை வலிக்காது" என்று ஒரு நண்பர் யோசனை கூறினார்.

அவருடைய குறுக்கு யோசனையின்படி நடந்து பார்த்தேன். என்ன ஆச்சரியம்! காலைத் துளிக்கூட வலிக்கவில்லை. முழங்கால் மூட்டியை மட்டும்தான் வலித்தது!

மலை யுச்சியை அடைந்ததும் அங்கே கொடுத்த குளிர்ந்த கோடைக்கானல் ஜலத்தைப் பருகிச் சிரமபரிகாரம் செய்து கொண்டு கோயில் கர்ப்பக்கிரகத்துக்குள் பிரவேசித்தோம்.

சிறிது நேரத்துக்கெல்லாம் மகாத்மாஜி, ராஜாஜி, தக்கர்பாபா மூவரும் வந்து சேர்ந்தார்கள். ஆண்டவனுக்கு, அபிஷேக அர்ச்சனை ஆராதனையெல்லாம் முடிந்த பிறகு எல்லோருக்கும் விபூதிப் பிரசாதம் வழங்கினார்கள். கோயில் குருக்கள் மகாத்மாவுக்கும் ராஜாஜிக்கும் தலையில் பெரிய முண்டாசாகக் கட்டிக் கழுத்தில் பூமாலை போட்டுக் கோயில் மரியாதை செய்தார். அப்போது ராஜாஜியும் மகாத்மாவும் அளித்த காட்சியானது சாக்ஷாத் பழனியாண்டவரே பார்த்து மகிழும்படியாக இருந்தது! ராஜாஜி, காந்தி இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு ஆனந்தம் தாங்க மாட்டாமல் வாய் விட்டுச் சிரித்து விட்டார்கள். அங்கே யிருந்த குருக்கள்மார் முதலிய எல்லோருக்கும் இது ஒரு பெரிய நகைச் சுவை விருந்தாயிருந்தது.

ஒரு விதமாகப் பழனியாண்டவன் தரிசனம் முடிந்ததும் அனைவரும் கீழே இறங்கத் தொடங்கினார்கள். நான் மட்டும் மெதுவாகக் காந்திஜி ஏறி வந்த பல்லக்கின் பக்கமாகப் போய் நின்றேன். என்னைக் கண்ட ராஜாஜி, "பல்லக்கருகில் உனக்கென்ன வேலை? இதில் காந்திஜி ஏறிச் செல்லப் போகிறார்!" என்றார்.

"பல்லக்கில் ஏறிக்கொள்வதற்காக நான் வரவில்லை. காந்திஜி ஏறிச் செல்லும் இந்தப் பல்லக்கைச் சுமக்கும் பாக்கியம் எனக்கு

ஒருவேளை கிட்டுமா என்று பார்ப்பதற்காகவே வந்தேன்!" என்று மழுப்பி விட்டு அப்பால் நகர்ந்து விட்டேன்.

பழனி யாத்திரை முடிந்து 'ஸ்பெஷல்' சென்னைக்குத் திரும்பும்போது தஞ்சாவூர், மாயவரம், கும்பகோணம், சீகாழி, சிதம்பரம் மார்க்கத்தில் கன வேகமாக வந்து கொண்டிருந்தது.

வரும்போது, ஸ்பெஷலில் கடைசி வண்டியில் உட்கார்ந்து கொண்டிருந்த திருச்செங்கோடு ஸ்ரீ ராமதுரை ரயில் கார்டுக்குப் பதிலாக அவருடைய வேலையைத் தாமே செய்து கொண்டிருந்தார். அதாவது, சிவப்புக் கொடி, பச்சைக் கொடி காட்டுவதற்குப் பதிலாக மூவர்ணக் கதர்க் கொடியைக் காட்டியே வண்டியை ஓட்டிக் கொண்டிருந்தார்! ரயில் கார்டு வாசுதேவராவுக்கும் இதனால் பாதி வேலை குறைந்து போய்ற்று. ஆனாலும் ஸ்ரீ வாசுதேவராவ், யாத்திரை முழுக்க எடுத்துக்கொண்ட சிரமம் கொஞ்சநஞ்சமல்ல. அடிக்கொரு தடவை ஒவ்வொரு வண்டியாக வந்து பார்த்துக் கொண்டே, "சாப்பிட்டீர்களா? தண்ணீர் வேண்டுமா? டிபன் வந்ததா?" என்று கேட்டு விட்டுப் போவார். "எல்லாம் வந்து விட்டது; ஒன்றும் வேண்டாம்" என்றால், "என்ன, ஸார்! அபசகுனம்போல் வேண்டாம், வேண்டாம் என்கிறீர்களே!" என்பார். "காந்தி மகாத்மா விஷயத்தில் இப்பேர்ப்பட்ட கைங்கரியம் செய்த நீங்கள் நன்றாயிருக்க வேண்டும்!" என்று சொல்லி அவரைத் திருப்தி செய்து அனுப்புவோம்.

சென்னைக்குத் திரும்பும்போது மகாத்மாஜி அங்கங்கே என்ன பேசினார் என்பது பற்றி மௌனம் சாதிக்க விரும்புகிறேன். ஏனெனில், மகாத்மாஜி பழனியிலிருந்து சென்னைக்குத் திரும்பிய தினம் மௌன தினமாகையால் அவர் ஒன்றுமே பேசவில்லை.

வரும் வழியில் ஆங்காங்கு கூடியிருந்த மாபெரும் ஜனக் கூட்டங்களைப் பற்றியும், மகாத்மாவுக்கு அவர்கள் அளித்த குதூகல வரவேற்புகளைப் பற்றியும் கூட மௌனம் சாதிக்க விரும்புகிறேன். ஏனெனில் எவ்வளவுதான் சொன்னாலும், அந்தக் குதூகல வரவேற்புகளின் பெருமையில் நூற்றில் ஒரு பங்கு கூடச் சொன்னதாகாது. அதைவிட மௌனம் சாதிப்பதே மேல் அல்லவா?

காந்தி மகானின் மதுரை—பழனி யாத்திரையின்போது சுமார் 30 லட்சம் தமிழ் மக்கள் அவரைக் கண்குளிரக் கண்டு தரிசித்தார்கள். ஹரிஜன நிதிக்காக 50 ஆயிரம் ரூபாய்க்குமேல் கொடுத்தார்கள். மதுரையில் நடந்த பிரார்த்தனையின் போதும் மற்ற இடங்களிலும் அவருக்கு அளித்த நூல் சிட்டங்கள் 30 ஆயிரத்துக்குக் குறைவில்லை.

மதுரையில் நடந்த பிரார்த்தனையின் போது கூடியிருந்த திரளான ஜனங்களைக் கண்டு மகாத்மா மலைத்துப் போனதோடு, அங்கே மலைபோல் குவிக்கப்பட்டிருந்த நூல் சிட்டங்களைக் கண்டு நிச்சயம் திகைத்துப் போயிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

* * *

மொத்தத்தில் தமிழக யாத்திரையானது மகாத்மாவுக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்திருக்க வேண்டும். "மதுரையில் கூடிய மாபெரும் கூட்டத்தைப்போல் மகாத்மாஜியே எப்போதும் பார்த்ததில்லை" என்று உடன் வந்த ஸ்ரீ கமலநயன்பஜாஜ் கூறினார். இப்படி மகாத்மாஜியே ஆச்சரியப்படத்தக்க முறையில் தமிழ்நாடு அவரை வரவேற்று வழி அனுப்பியிருக்கிறது. இவ்வளவுக்கும் மகாத்மாஜிதான் முக்கிய காரணமென்றாலும், மூலகாரணம் ராஜாஜி என்பதை யாரும் மறுக்க முடியாது.

மதுரைக் கோயிலையும், பழனிக் கோயிலையும் அவர் ஹரிஜனங்களுக்குத் திறந்து வைக்கவில்லை என்றால் இத்தகைய ஒரு மகோன்னத யாத்திரைக்கு மகாத்மாஜி ஒப்புக் கொண்டிருக்கவும் மாட்டார்; தமிழ்நாட்டுக்கும் இத்தகைய ஒரு அரிய சந்தர்ப்பம் கிட்டியிருக்காதல்லவா?

மகாத்மாஜி சௌக்யமாக வர்தா போய்ச் சேர்ந்தவுடன் தமது மதுரை பழனி யாத்திரையைக் குறித்து ஹரிஜன் பத்திரிகையில், "நான் யாத்திரை சென்ற வழி நெடுக நடந்த மாபெரும் பொதுஜன வரவேற்பு ராஜாஜிக்குத் தமிழ்நாட்டு மக்களிடம் உள்ள செல்வாக்கினாலல்லாமல் எனக்கு மட்டும் கிடைத்தவையல்ல" என்று எழுதியிருக்கிறார்.

மகாத்மா மேற்கண்டவாறு எழுதியதின் அர்த்தம் இன்னதென்று தெரியாமல் சிலர் அவஸ்தைப் படுகிறார்கள். "ராஜாஜி பின்னோடு போயிராவிட்டால் மகாத்மாவுக்காகக் கூட்டம் கூடியிருக்காதா?" என்று கேட்கிறார்கள். கூட்டம் கூடித்தான் இருக்கும். அதற்கும் காரணம், ராஜாஜி சென்ற இருபத்தைந்து வருஷங்களாகத் தமிழ் மக்களிடையே மகாத்மாவின் தத்துவங்களைப் பிரசாரம் செய்து வந்திருப்பதுதான். இந்த உண்மையைத்தான் காந்தி மகான் எடுத்துச் சொன்னார். சத்தியமே உருவெடுத்த மகானுடைய வாக்கு சத்தியமாயிருப்பதில் வியப்பு என்ன? வாழ்க மகாத்மா காந்தி!

வீதி வழி



கி. ரா. கோபாலன்

○ ★ ○

குளத்திற்கே தனியரசன் போல் தலை நிமிர்ந்து நின்றது அந்தத் தாமரை மலர். தன்னுடைய பூரணமான அழகை வெளிக் காட்ட அஞ்சுவது போல இதழ்களை விரித்தும் விரியாமலும் தோற்றமளித்தது. படியில் குடத்தை வைத்து விட்டுத் தற்செயலாய்க் குளத்தில் பார்வையைச் செலுத்திய தேவாவின் மனதை எப்படியோ அத் தனி மலரின் அழகு வசியப் படுத்தி விட்டது. அவள் கண்களாலேயே அதைப் பறித்து விடுபவள் போல் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுதுதான் குளக்கரைக்கு வந்த வரதன் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான். பரஸ்பரம் இந்த நேத்திரா னந்தம் எவ்வளவு நேரம் நீடித்திருந்த தென்பதைக் கணக்காக ஒன்றும் சொல்ல முடியாது.

அவளை அறியாமல் அவன் வாய் "உனக்கு அந்தப் பூ வேணுமா?" என்று கேட்டது. அவனுடைய அன்பொழுகும் வார்த்தையும் பார்வையும், அவளுடைய வெட்கத்தை அம்பலத்தில் இழுத்து விட்டன. அவள் கூச்சத்துடன் "வேண்டாம்" என்று பதில் சொன்னாள். ஆனால் அவளுடைய கண்கள் 'வேண்டும்' 'வேண்டும்' என்று மன்றாடின.

அவன் சட்டென்று தண்ணீரில் குதித்தான். ஒரு சில வினாடிகளில் அவன் அந்தத் தாமரை மலரோடு அவளிடம் வந்து "இந்தா!" என்றான். எல்லை மீறிய வெட்கத்திடையே எழுந்த ஆசையை
அடக்கிக் கொண்டு தேவா அம்மல
வாங்கிக் கொண்டாள். ஏழு சமுத்தி
தைத் தாண்டி ஒரு வைர மணி
கொண்டு வந்து கொடுத்தது போ
அவன் மனதில் ஒரு நிம்மதியும் கர்வ
தலை தூக்கியது.

'விறுவிறுப்பாக ஆரம்பிக்கப்பட்ட
சினிமாப் படம் ஒரு முக்கியமான கட்
டில் அறுந்து விடுவதுபோல் உறங்
கிடந்த மனதைத் தட்டி யெழுப்பி
உணர்ச்சியை உண்டாக்கி விட்டு மன
தது இச்சிறு நிகழ்ச்சி.

குளம் அப்படியேதான் இருந்த
தாமரையும் பெருகி மலர்ந்து நிர
அக்குளத்தை முன்னிலும் அ
செய்தது. அவனும் காலையில் அக்கு
திற்கு வருவதை ஒரு வழக்க மாக்
கொண்டான். ஆனால் அவளை மாத்தி
காணோம். 'அவள் யார்? எங்கிருப்பவ
என்பதெல்லாம் அவனுக்குத் தெரிய
எதிர் பாராதவண்ணம் ஏற்பட்ட இ
பரிச்சயத்திற்குப் பிறகு எழுந்த சு
மான எண்ணங்களெல்லாம் அர்த்த ம
தாகிவிட்டன. தினம் நம்பிக்கையு
வருவதும் ஏமாற்றத்துடன் போவது
மூன்று மாதங்கள் கழிந்தன அவனு

* * *

அன்று கார்த்திகை சோமவா
அவன் ஸ்வாமி தரிசனம் செய்துவிட
கோவில் பிராகாரத்தில் வந்து கெ

இருந்தான். அந்த நீண்ட பிராகாரத்திடையே சுவரில் அடிக்கப்பட்ட கண்ணாடி விளக்கு ஒரு சிறிய சுற்றளவுள்ள இடத்தை மாத்திரம் திட்டாகப் பிரகாசிக்கச் செய்துகொண்டிருந்தது. நடுப் பிராகாரத்திற்கு — விளக்கின் சமீபமாக அவன் வந்த பொழுது, "உங்களைத்தானே! சற்று நில்லுங்கள்" என்ற குரல் கேட்டு அவன் திடுக்கிட்டுத் திரும்பினான்.

அவன் பிரமிப்படைந்து நிற்பதைப் புரிந்து கொண்டவள் போல் தேவா ரளனமாகச் சிரித்து, "நான் முன்பிருந்ததைவிட இப்பொழுது ரொம்ப மாறிவிட்டேன், இல்லையா?" என்றாள்.

"ஆமாம்...... இவ்வளவு நகைகள்......"

"அதிசயமாய்த்தான் இருக்கும். ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் நகையில்லை. பதினாயிர ரூபாய் நகையை நான் இப்பொழுது சுமந்து கொண்டிருக்கிறேன். .. ஹூம் ... எல்லாம் பாவச் சுமை ..."

அவள் வார்த்தைகளில் வெறுப்புணர்ச்சி தோன்றியது. அவன் ஒன்றும் விளங்காதவன்போல் அவளையே பார்த்துக் கொண்டு நின்றான்.

"ஹூம் — இதெல்லாம் சபாபதி செட்டியார் பைசா பைசாவாகச் சேர்த்தது; பஞ்சகாலத்தில் ஊர் ஜனங்களிடம் ஒன்றுக்கு மூன்றாக விற்றுக் கொள்ளையடித்தது" என்று சொல்லி அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் முகத்தில் பரவியிருந்த திகைப்பு மறையவில்லை.

"உங்களுக்கு என்னை யாரென்று தெரியாது! உண்மைதானே?"

"ஆம்! தெரியாதுதான்; என்றோ ஒரு நாள் பார்த்ததுதானே! நீ யாரென்று தெரிந்துகொள்ள ஆசை இருந்தாலும் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை."

"ஆமாம்! அந்த ஒருநாளை என்னால் மறக்க முடியுமா? இருக்கட்டும்; நான் யார் தெரியுமா?......நான் இந்தச் சிவன் கோயில் ஊழியக்காரி."

"..................!"

"இன்னும் புரியவில்லையா! நான் மடக்கு மடவளாகத்தி லிருக்கிறேன்."

"அப்படி யென்றால் நீ ......!"

"ஆம்; தாஸிதான் — இரும்புக் கடை சபாபதி செட்டியாருக்கு என்மீது அன்பும் கருணையும் பிறந்திருக்கிறது. இன்று ஸ்வாமி சன்னிதானத்தில் முறைப்படி நடக்க வேண்டியதெல்லாம் நடந்துவிட்டது. நாளைய தினம்......"

அவள் ஒரு தாஸி என்றவுடனேயே கலகலத்துப் போன அவன் மனக் கோட்டை பின்னும் அவள் சொல்லிய விவரங்களைக் கேட்டதும் இடிந்து சரிய ஆரம்பித்தது. நெடு நாட்களாய்ச் சேர்த்து வைத்திருந்த தனத்தைப் பறிகொடுத்த லோபியைப்போல் அவள் முகத்தைப் பார்த்தான்.

அவன் சமீபமாக வந்து நின்று தேவா கெஞ்சும் குரலில், "இத்தனை நாளாக உங்களைப் பார்க்க முடியவில்லை. வீட்டிற்குள் அடைத்து வைத்திருந்தார்கள். நான் படுகுழியில் விழக் காத்திருக்கும் பொழுது இந்தச் சன்னிதானத்தில் நீங்கள் தெய்வம்போல் வந்து விட்டீர்கள், என்னைக் காப்பாற்ற!"—என்றாள். அவன் ஏதோ ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான். அவள் மறுபடியும் படபடப்போடு பேச ஆரம்பித்தாள். அவள் குரல் தழு தழுத்தது. "நாளைய தினம் என்ன நடக்கப் போகிறது என்பதை எண்ணும் பொழுது என் மனம் நடுங்குகிறது. நான் விஷம் சாப்பிடுவதாய் இருந்தால்கூட இப்படி பயப்பட மாட்டேன். தெய்வ சன்னிதானத்தில் கேட்கிறேன், உங்களுக்கு என்மீது அன்பில்லையா?" என்றாள்.

அவன் நடுங்கும் குரலில் பதிலளித்தான். "ஏன் இல்லை? நிறைய இருக்கிறது."

"தைரியம் இருக்கிறதா?"

"எதற்கு......?"

"எதற்கா! அன்பைக் காப்பாற்ற!"

இந்தக் கேள்விக்குப் பதில் சொல்ல அவனுக்கு மனமில்லையோ — சக்தியில்லையோ — மெதுவாக அவள் கைகளிலிருந்து தன் கரங்களை மீட்டுக்கொண்டு தலை குனிந்து மௌனமாக நின்றான்.

"என்ன யோசனை செய்கிறீர்கள்! அன்பைக் காப்பாற்ற உங்களுக்குச் சக்தியும் தைரியமும் இல்லையா?"

"சபாபதி செட்டியாரைப்போல் நான் அவ்வளவு பணக்காரனா?"

இந்த வார்த்தை தேவாவின் மனதில் சுருக்கென்று தைத்தது. "சபாபதி செட்டியார் லக்ஷ ரூபாயை என் காலடியில் கொண்டு வந்து கொட்டலாம். ஆனால், உங்களைப்போல் என் மனதறிந்து, அன்பாக ஒரு தாமரைப் பூவைக் கொண்டு வந்து கொடுக்க முடியுமா?" அவள் தன் ஹிருதயத்தையே அவனிடம் திறந்து காட்டி விட்டதாக எண்ணி ஆர்வத்தோடு அவன் முகத்தைப் பார்த்தாள். அவன் வேறெங்கோ பார்வையைச் செலுத்தியபடியே, "நீ சொல்வதெல்லாம் சரிதான். ஆனால்......" என்று தயங்கினான்.

"நான் ஒரு தாஸி!"

"இல்லை. அதற்காக இல்லை; — நான் பரம ஏழை — என்னால் உனக்கு என்ன செய்ய முடியும்?"

"நீங்கள் ஏழை யென்று எனக்கு நன்றாகத் தெரியும். இப்பொழுது பதினாயிரம் ரூபாய் நகைகள் இருக்கின்றன என் மேல். இந்த நகைகளை வைத்துக் கொண்டு நாம் வேறு எங்காவது போய்ச் சுகமாக ஜீவனம் செய்ய முடியாதா? உங்களுக்குத் துணிவு இருந்தால் இன்று இரவே ......"

இந்த வார்த்தையைக் கேட்டதும் அவன் சவுக்கடி பட்டவன்போல் துள்ளினான். அவள் மனதை முகச் சாயலால் தெரிந்து கொள்ள முயற்சிப்பவன்போல் உற்றுப் பார்த்தான். நியாய தர்மங்களில் பண்பட்ட அவன் மனம் மனமொத்த அன்பைக் காப்பாற்றுவதற்காயிருந்தாலும் ஒரு துணிகரமான காரியத்தைச் செய்ய அஞ்சியது. 'பதினாயிர ரூபாய் நகையுடன் ஒரு பெண்ணைக் கடத்திச் சென்றான்' என்ற வதந்தி தனக்கும் தன் குடும்பத்தினர்களுக்கும் எவ்வளவு இழுக்கை உண்டாக்கும் என்பதை எண்ணியபோது அவன் உள்ளம் நடுங்கியது. அவனுடைய தயக்கமும் குழப்பமும், துடித்துக் கொண்டு நின்ற தேவாவின் பொறுமையைச் சோதித்தன. "உங்களுக்கு என்மீதுள்ள அன்பு உறுதியாயிருந்தால் எதற்காகப் பயப்பட வேண்டும்? சபாபதி செட்டியாரை வஞ்சிக்கலாமா என்று நினைக்கிறீர்களா? நியாயத்தாலும் உழைப்பாலும் சம்பாதித்த பணம் ஒருநாளும் எங்கள் வீட்டுப் பக்கம் வராது. தவிர, இதை வெளியில் சொன்னால் அவரைத்தான் ஊரில் சிரிப்பார்கள். இதற்கு நீங்கள் அனாவசியமாக ஏன் பயப்பட வேண்டும்? இன்று விடியற்காலை நாலு மணிக்கு வரும் போட் மெயிலில் நாம் எங்காவது போய் விடுவோம்."

அப்பொழுது அந்தச் சோதனையிலிருந்து எப்படியாவது விடுபட நினைத்தான் அவன். ஒரு விதமாக மனதைத் திடம் செய்து கொண்டவன்போல் "ஊம்" என்றான். அவனுடைய 'ஊம்' என்ற வார்த்தை அவள் மனதில் நம்பிக்கையை ஏற்படுத்தியது. "சரி! நான் ஸ்டேஷனில் காத்திருக்கிறேன். நீங்கள் தவறாமல் வந்து விடுங்கள்" என்று சொல்லி அவள் சட்டென்று நடந்து மறைந்தான்.

ரயில்வே ஸ்டேஷனுக்கு வெளிப்புற முன்ன கொட்டகையில் அவள் விளக்கின் நிழலில் நின்று கொண்டிருந்தாள். கையில் ஒரு துணிப் பை, அவள் தேகத்தில் மின்னிக் கொண்டிருந்த ஆபரணங்களெல்லாம், அந்தப் பையில் அடக்கம் செய்யப்பட்டிருந்தன. வேறு மனிதர்கள் தன்னை அடையாளம் கண்டு கொள்ளக் கூடாது என்பதற்காக அவள் உடுத்தியிருந்த கறுப்புப் புடவையினால் பாதி முகம் மறையும்படி முக்காடிட்டிருந்தாள். ஒவ்வொரு விநாடியும் வரதனை எதிர்நோக்கும் உள்ளத்துடிப்பு அவள் கண்களில் பிரதிபலித்தது. வரதன் வருவானென்று எதிர்பார்க்... ஸ்டேஷன் போர்ட்டருக்கு என்ன அ... கறை! வண்டி வரப்போகிறது என்பதை அறிவுறுத்த மணியை அடித்தான். தேவாவின் மனதில் தேங்கி நின்ற நம்பிக்கையை அவநம்பிக்கை உறிஞ்ச ஆரம்பித்தது. மனதில் எங்கோ ஒரு மூலையில் ஒ...டிக் கொண்டிருந்த சந்தேகப் புள்ளி வரவர வளர்ந்து பெரிதாகிக் கொண்டு வந்தது.

மூலைக்கு மூலை சுருண்டு படுத்திருந்த ஜனங்கள் எழுந்து, பிரயாணச் சீட்டை பெற்றுக்கொண்டு அவசர அவசரமாக போனார்கள். வண்டியும் வந்தது. இரண்டு நிமிஷம். 'நான் போய் வருகிறேன்' என்று சொல்லுவதுபோல் ரயில் ஒரு சப்தமிட்டு விட்டுக் கிளம்பியது. இருளில் ஒன்றி நின்று கொண்டிருந்த தேவாவின் மன... இன்னும் ஒரு நிமிஷத்திற்குள் த... பிற்கால வாழ்வு எப்படிப்பட்டதா... இருக்க வேண்டுமென்பதைத் திட்ட...மாக நிச்சயம் செய்துகொள்ள வேண்டி...யதாயிருந்தது. உறுதியற்ற ஒரு அன்பி... நம்பிக்கை வைத்து வாழ அவள் கடு...கிறாள். அவள் முகத்தில் ஒரு அசட்டுச் சிரிப்பு. சோதனைக்குப் பிறகு வெறுப்பு கொண்ட அவள் மனம் தனக்குள் சொல்லிக் கொண்டது:—


"ஊம், அன்பில் உறுதியில்லை;—உறுதியற்றவர்களை நம்பி வாழ்வதில் இன்...மில்லை.........விதியானது என்னைச் செ...டியார் போன்றவர்களுக்குகந்த பொ...ளாகத்தான் படைத்திருக்கிறதுபோ...லிருக்கிறது!"

சற்று நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்த பிறகு, அவள் இருளோடு சாலை ஓரமா... நடக்க ஆரம்பித்தாள். அவள் மனத்தி... போராட்டம் அடங்கி இப்போது நிம்ம... நிலவியது. காரணம், விதியை எப்ப...யும் ஏமாற்றி விடுவது என்று அவ... தீர்மானித்திருந்ததுதான்.

* * *

மறுநாள் தேவா என்னும் தாசி... பெண் அந்த ஊர்த் தாமரைக் குளத்தி... நிலைகொள்ளாத இடத்துக்குத் தவறி... போய்த் தண்ணீரில் மூழ்கி உயிர் து...தாள் என்னும் செய்தி பரவி, எல்லாரை...யும் பயங்கரத்தில் ஆழ்த்தியது.


உங்களுடைய சுவாசக்குழாய்களுக்கு
உயர்ந்த குணமளிக்கும் மருந்தே நல்லது!
ஸிரோலின்
இருமலையும்
ஜலதோஷத்தையும் ஒழிக்கிறது


ஸ்டானிஸ்ட்ரீட்
பிரில்லியண்டைன்
கெட்டியான
திரவமான
கூந்தல் தைலங்கள்
மணமுள்ள
கான்தரிடைன்
ஆமணக்கு
தேங்காய்
பொன்மயமான
நிரந்தர வேவிங்
ஸாசெட்
ப்ளூயிட்
லோஷன்
லிக்விட் ஷாம்பூ
ஸ்டான்க்ரீம்
ஸ்மித் ஸ்டானிஸ்ட்ரீட் &
கம்பெனி லிமிடெட்
கல்கத்தா, பம்பாய், சென்னை, லக்ஷ்மணபுரி, கராச்சி, அமிருதஸரஸ்



ரொம்ப சரி!

வீட்டுக்காரர் :—என்னப்பா, நீ இப்போதெல்லாம் கால் சட்டை போடத் தொடங்கிட்டே?

வண்ணான் :—என்னங்க பண்றது! நான் வெளுக்கிற வீடுகளிலே வேஷ்டியே விழறது இல்லீங்களே! —மூ. அப்துல் வகாப்

★

கை சொல்லும்!

ஒருவர் ஓட்டல்காரரைப் பார்த்து, "என்ன ஸார்! நேற்று செல்லாத எட்டணாவைக் கொடுத்து விட்டீரே?" என்று கேட்டார்.

ஓட்டல்காரர் :—இருக்கவே இருக்காது ஸார், என் கை சொல்லுமே, ஸார், எது செல்லும், எது செல்லாது என்று. இப்பொழுது எங்கே ஸார் அது?

அவர் :—சற்று முன்புதான் உங்களிடம் சாப்பிட்டதற்கு அதைக் கொடுத்தேன்!

—என். எஸ். வி. ராஜா.

★

யோசனை எப்படி?

ராமு (ஒரு காலணாவை எடுத்து) :—இதைச் சுண்டிப் போடலாம். எழுத்து விழுந்தால் தூங்கலாம். தலை விழுந்தால் சாப்பிடலாம். இரண்டும் விழாமல் காசு செங்குத்தாக நின்றால் வீட்டுக் கணக்குப் போடலாம்!

கிட்டு :—நல்ல யோசனை!

—வி. என். சிவராஜன்.

★

நல்ல மனிதர்!

ஒரு கல்யாண வீட்டிலிருந்து ஒருவர் வெளியே வந்து, வாசலில் கிடந்த செருப்புகளில் ஒரு ஜோடியை மாட்டிக் கொண்டு புறப்பட்டார். பின்னாடியே ஒருவர் ஓடி வந்து, "ஸார்! நீங்கள்தான் வந்தராஜபுரம் வெங்கட்ராமய்யரா?"



"இல்லையே! ஏன்?"

"நான்தான் அந்த வெங்கட்ராமய்யர்! நீங்கள் போட்டிருக்கும் செருப்பு என்னுடையது!" —எஸ். சதாசிவம்.

சரிதான்!

மனைவி :—என்னது! தோடு வாங்கிண்டு வா கோன்னு சொன்னேனே, அதைக் காதில் போட்டுக் கொண்டீர்களா?

கணவன் :—நீதானேடி அதைக் காதில்போட்டுக்கொள்ள வேண்டும்? —எச். குருமூர்த்தி

★

நல்ல பேரம்!

பையன் :—ஒரு பென்சில் என்ன விலை?

கடைக்காரன் :—ஒரு அணா.

பையன் :—டஜனாக வாங்கினால்?

கடைக்காரன் :—அதே விலைதான்!

பையன் :—அப்படியானால் இந்தா ஒ அணா; ஒரு டஜன் பென்சில் கொடு.

—ஆ. ரங்காச்சாரி

★

என்ன கற்றுக்கொண்டான்?

தோல் பை, பர்ஸ் இவைகள் தைக்கு கடையில் ஒருவர் வந்து கடை முதலாளி டம் பின்வருமாறு கேட்டார்: "ஸார், நம்ம பையன் இப்பொழுது என்ன கற்று கொண்டிருக்கிறான்?"



முதலாளி :—நேற்றுத்தானே ஸார், சேர் தான்? முதலில் பர்ஸ் அடிக்கக் கற்று கொண்டிருக்கிறான்! —எம். எஸ். மணி.

★

யோக்கியர்!

ராமன் :—இந்தக் காலத்தில் ஒருவரையு நம்பக்கூடாது. கடைக்காரன் என்னிட செல்லாக் காசைக் கொடுத்து ஏமாற் விட்டான்.

மனைவி :—எங்கே பார்க்கலாம்?

ராமன் :—என்னிடம் இல்லை; அதைப் பால்காரனிடம் கொடுத்து விட்டேன்.

—பா. முருகேசன்

★


பதிலுக்குப் பதில்

ஒரு சைக்கிள் வண்டியும், ஒரு பாதசாரியு மோதிக் கொண்டார்கள்.

சைக்கிள் வண்டிக்காரர் :—ஏனய்யா! நான் மணியடித்தது உமக்குக் காதில் வி வில்லையா?

பாதசாரி :—அது சரிதானய்யா! 'பிரேக் இருப்பது உம் கண்ணில் பட வில்லையா?

—வி. எஸ். சுந்தரராஜன்.



இதோ!
உங்களுடைய
சோப்பு
காந்தி
KANTI
ஸ்வஸ்திக் ஆயில்
மில்ஸ், லிமிடெட், பம்பாய் 15.
H.A.S.
150/5



Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Pres
116-119, Sladens Garden, Poonamalle High Road, Kilpauk, Madras.

கல்கி



LKI பிப்ரவரி 24,1946 4 அணா

நிரந்தரமாக நரை மயிரை போக்குங்கள்



நரை மயிர் உங்கள் வயதைக் காட்டிக் கொடுத்து விடுகிறது. இதனால் நீங்கள் முதுமைத் தோற்றத்துடன் காணப்படுவதுடன், வயோதிக உணர்ச்சியையும் அடைகிறீர்கள்.

இவைகளினின்றும் உங்களைக் காப்பாற்ற, இதோ ஓர் புதிய, நவீன முறை கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. இது கேசத்திற்கும், கபாலத்திற்கும் நாளடைவில் தீங்கிழைக்கக் கூடிய ஓர் தற்காலிக நரை மறைக்குப் சாயமல்ல. வாஸ்மால் கானடைஸிற்கு ஓர் உத்தரவாதமான சிகிச்சை. இது நரை மயிரை நிரந்தரமாகப் போக்குவதில் சக்தி வாய்ந்தது மன்னியில், கபாலத்திற்கும் போஷாக்கு அளித்து, பொடுகைப் போக்கி, கேசத்திற்கு கருகருவென்ற இயற்கையான மினுமினுப்பையும் அளிக்கிறது.

வாஸ்மால் ஏராளமான கிராட்டின் வர்ணமையை மயிர்க் கால்களில் உண்டாக்கி, நசித்துக் கொண்டு வரும் வர்ணமூட்டும் துவாரங்களுக்கு புத்துயிர் அளித்து, கொஞ்சம் கொஞ்சமாக நரை மயிரை கருமையாக மாற்றுகிறது. நீங்கள் இதற்கு அதிகநாள் காத்திருக்க வேண்டியதில்லை. வாஸ்மால் அதி விரைவில் பலனளிக்கும்.

கேச வளர்ச்சிக்கும், நரையைத் தடுப்பதற்கும், நரையை மாற்றுவதற்கும் அதி உபயோகமான விட்டமின் எப் மற்றும் பி இவற்றின் சேர்க்கை வாஸ்மாலில் அடங்கியிருக்கிறது.

வாஸ்மால் தைலம் ஒரு பாட்டில் ரூ 4/-

முழு நரைக்கு வாஸ்மால் கான்ஸன்ட்ரேட்டட் போமேட் ஒரு ஜாடி ரூ. 5/-

உங்கள் கெமிஸ்டுகளிடமும், ஸ்டோர்ஸ்களிலும் கிடைக்கும். அல்லது கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதவும்: **ப்ளேசர் லிமிடெட், தபால் பெட்டி 875, பம்பாய்.**

ஓர் சாயமன்று
வாஸ்மாள்
நரையை ஒழிக்க

FL 15—Tamil

டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: மெஸர்ஸ். விஜயா டிரேடிங் கம்பெனி, 12, வெங்கடாசல செட்டித் தெரு, பார்க் டவுன், மதராஸ்.

Regd. No. M. 4392

